A/L 87 Day Class
பிரிவு III
ஆரம்பம்: 10-11-1986
Zoology : 1.30–2.30 p m.
Botany : 2 30–3.30 p m.
Physics : 3.30–4.30 p m.
Chemistry; 4.30–5.30 p,m
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

சஞ்சீவி

விலை ரூ2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

G.C.E. (O/L) 19
Physics: VARNAM
நடைபெறுகின்றது.
திங்கள், வெள்ளி;
3-4 ELECTRICITY
திங்கள், வெள்ளி:
4-5 MECHANICS
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 6 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு அவ் பிறை 19 (22-11-1986) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :44

கருத்துக் கலசம்

மரம் நடுங்கள்

இப்போது நடப்பது தமிழுக்கு கார்த்திகை மாதம். முந்திய காலத்தில் என்றால் அடைமழை மாதம். சூரியனையே பார்க்க முடியாது. வானமும் நிலமும் ஒரே காராக இருக்கும்.

முந்திய காலம் என்றால் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பல்ல. ஆகக்கூடியது சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் எனலாம்.

அந்தக் காலத்தில் ஒரே ஒழுங்கு முறையான பருவ காலங்கள். குறிப்பிட்ட மாதம் தொடக்கம் குறிப்பிட்ட மாதம் வரை இன்ன பருவ காலம் என்று நிச்சயப் படுத்திச் சொல்லலாம்.

இப்போது அப்படியல்ல. மழை பெய்ய வேண்டிய காலத்தில் வெயில், பனி என்று எல்லாம் தலை கீழாகி விட்டது.

அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. இயற்கைச் சூழலின் சமநிலையை மனிதன் பலவிதத்தாலும் கெடுத்துவிட்டான்.

எமது பிரதேசங்களில் காடு அழிப்பும், மரம் வெட்டுதலும் மழை வளத்தைப் பாதித்துள்ளன.

ஆகையால் மரம்நடுதலின் அவசியத்தை சிறியோர் முதல் முதியோர் வரைக்கும் விளக்கவேண்டிய அவசியம் உள்ளது. மரங்களைக் கண்டபடி வெட்டி எறிவதைத் தவிர்ப்பது மிகப் பிரதானம்.

ஒரு மரத்தை வெட்டினால் அதற்குப் பதில் பத்து மரங்களை நட வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள். அது போதாது. பத்து அல்ல நூறு மரங்களை வளர்த்தபின்னர்தான் ஒரு மரத்தை வெட்ட வேண்டும்.

மரநடுகை மழை வளத்தை மட்டுமன்றி மண் வளத்தையும் மேம்படுத்தும். மரநடுகை பலநோக்குடையது என்பதை மில்க் வைற் அதிபர் திரு. க. கனகராசா அச்சுவேலியில் நடந்த கூட்டம் ஒன்றில் எடுத்து விளக்கி இருக்கிறார்.

அவர் சொல்லோடு மட்டும் நிற்காமல் மரநடுகையைச் செயலளவிலும் ஊக்குவித்து வருபவர். அது அவர் செய்துவரும் சமூகப் பணிகளில் முதன்மையானது என்றுசொல்லலாம்.

அவரைப்போன்று மற்றும் வசதி படைத்தவர்களும், சமூக நலன்விரும்பிகளும் மரநடுகைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். சமூகநல மன்றங்கள், ஸ்தாபனங்களும் இதனைக் கருத்திற் கொண்டு செயலில் இறங்கவேண்டும்.

உரிய காலங்களில் உரியமரக் கன்றுகளை நட்டு நாட்டு வளத்துக்கு உதவுங்கள். வீட்டுக்கு வீடு, வளவுக்கு வளவு மரம் நடுங்கள். நல்ல மரங்களை வெட்டி வீழ்த்தாதீர்கள்.

கோட்டை ஷெல் வீச்சுக்கு

கிழக்கு, மலையக, யாழ் மக்கள் நால்வர் இரை

2 முஸ்லிம்கள்; 2 தமிழர்

பெண் உட்பட அறுவர் காயம்

- அலுவலகச் செய்தியாளர்: க. இரத்தினராஜசிங்கம் -

யாழ்ப்பாணம், நவம்பர் 22

பெங்களூர் பேச்சு பிசுபிசுத்துப் போன பின்னர், யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்று ஏவப்பட்ட ஷெல் குண்டுவீச்சுக்கு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இருவரும், மலையகத்தைச் சேர்ந்த ஒருவரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் இரையானார்கள்.

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடியைச் சேர்ந்த இருவர் தொழில் நிமித்தம் யாழ்ப்பாணம் வந்தவர்கள். நேற்று மாலை வாழைப்பழக் கடைக்குச் சமீபமாக விழுந்த ஷெல் சிதறி வெடித்ததால் அந்த இரு இளைஞர்களும் உடல் சிதறிச் செத்தார்கள். அதே சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் பலியானார்:

நேற்றுக் காலை விழுந்த ஷெல் குண்டு ஒன்றுக்கு மலையகம், புசல்லாவையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலியானார். அவரும் தலைவெடித்து மூளை சிதறிய நிலையிலேயே மரணமானார். இவர் யாழ்ப்பாணத்தில் தேனீர்க்கடை ஒன்றில் பணிபுரிபவர்.

நேற்றைய ஷெல் தாக்குதல்களினால் முஸ்லிம் பெண்மணி ஒருவர் உட்பட ஆறு பேர் காயமுற்றனர்

ஷெல் தாக்குதல்களினால் சந்தையில் உள்ள பாய்க்கடை ஒன்று எரிந்தது. மற்றும் பல கடைகளும் சேதமடைந்தன.

நேற்றுக் காலை சுமார் ஏழுமணி அளவில் யாழ். கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன.

யாழ். கோட்டை முகாம் ஷெல் தாக்குதல்களை அடுத்து மண்டைதீவுக் கடற்பகுதியில் நின்ற பீரங்கிக் கப்பலில் இருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இதனிடையே வியாழக்கிழமை நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னரும் யாழ். கோட்டை முகாமில் இருந்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் காரணமாக புசல்லாவையைச்சேர்ந்த தி. சுந்தரம் (32 வயது) என்ற இளைஞர் தலை

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ் கோட்டை ஷெல் வீச்சுக்கு இலக்காகி மரணமான மலையக இளைஞர் தி. சுந்தரத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

காயமடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், நவ. 22

நேற்றைய ஷெல் தாக்குதலில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:

முகமட் கியாஸ் (18 வயது) சோனகதெரு வாசி, கந்தசாமி முருகானந்தம் (22வயது) ஆறுகால்மடவாசி, எஸ் எம். அசீல் (22 வயது) குருநகர்வாசி, ஏ. நஜீப் (32 வயது) சோனகதெரு, மகாலிங்கம் (45 வயது)இணுவில், முகம்மதலி பாத்திமா(40வயது) யாழ்ப்பாணம். (உ-10)

விஜிதரன் மர்மம் நீடித்தால்

சில தினங்களுக்குள் பாரதூரமான விளைவுகள்

துணைவேந்தர் வித்தி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்-பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கடத்தல் மர்மம்தொடர்ந்தும் நீடிக்குமாயின் இன்னும் சில தினங்களில் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ்-பல்கலைக் கழக உப வேந்தர் திரு. சு. வித்தியானந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

விஜிதரனின் மர்மம் காரணமாக இரண்டு பெண்கள் உட்பட ஐந்து மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார்கள்.

வெள்ளியுடன்மூன்றாவது நாள் அவர்கள் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க அவர்கள் உறுதி பூண்டுள்ளனர்

இதன் காரணமாக ஏறக்குறைய மூன்று கிழமைகளாக பல்கலைக் கழகம் இயங்க முடியாத நிலையில் இருக்கிறது

இந்நிலை நீடிக்குமாயின் பாரிய விளைவுகள் ஏற்படலாம் என அஞ்ச வேண்டி உள்ளது.

எனவே விஜிதரனை கண்டு பிடித்து தருமாறு அல்லது அவர் பற்றிய தகவல்களைத் தருமாறு

(8ஆம் பக்கம் பார்க்க)

ஆரையம்பதியில் சம்பவம்

படையினர் சுட்டு இரண்டு பேர் மரணம்

மட்டக்களப்பு, நவ. 22

மட்டக்களப்பு, ஆரையம்பதியில் ரோந்து வந்த படையினரைக் கண்டு ஓடியவர்கள் மீது படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

நேற்று மாலை 4 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

படையினர் மூன்று பேரைக் கைதுசெய்ததுடன் இரண்டு சடலங்களையும் கொண்டு சென்றனர்

கைது செய்யப்பட்டவர்கள் கல்லடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். (உ-எ-21)

பலாலியில் புது விமானம்

யாழ்ப்பாணம், நவ. 22

பலாலி இராணுவ முகாமுக்கு நேற்று புதிய குண்டு வீச்சு விமானம் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

சீனாவிடம் இருந்து ஸ்ரீ லங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட அதிவேகக் குண்டு வீச்சு விமானம் இது.

நேற்றுக் காலை 9 மணி அளவில் இந்த விமானம் பலாலியை வந்தடைந்தது. (உ-10)

ஊரடங்கு

கொழும்பு, நவ. 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், பதியகுளம் நீங்கலாக, நேற்றுக்காலை கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்பட்டது. (உ-எ)

நேற்றைய ஷெல் வீச்சில் காயமடைந்த முஸ்லிம் பெண்மணியும், மற்றொரு நபரும்.

செய்திச் சாரம்

இன்று 4ஆவது நாள்

யாழ்ப்பாணம். நவ. 22

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் நேற்று மூன்றாவது நாளாக சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டனர். இன்று உண்ணாவிரதத்தின் நான்காவதுநாள்.

விஜிதரனை விடுதலை செய்யும்வரை எந்தச் சந்தர்ப்பத்திலும் தாம் சாகும்வரை உண்ணாவிரதத்தைக் கைவிடப்போவதில்லை எனவும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

(உ-10)

போராளிகள் தலைவர் புதுடில்லியில்

புதுடில்லி, நவ. 21

ஒரு தமிழ்ப்போராளிக் குழுவின் தலைவர் இந்திய அரசு அதிகாரிகளுடன் மேலும் பேச்சுக்கள் நடத்த புதுடில்லி வந்து சேர்ந்தார்.

இந்திய அரசின் அழைப்பின் பேரில் இந்தப் போராளித் தலைவர் சென்னையில் இருந்து புதுடில்லி வந்தார் என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐந்து போராளிக் குழுக்களில் எந்தப் போராளிக் குழுவின் தலைவர் அவர் என்பதை வெளியிட புதுடில்லி வட்டாரங்கள் மறுத்து விட்டன.

(உ-எ)

பிந்தியசெய்தி

புலிகள் கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 22

முல்லைத்தீவு, தண்ணிரூற்றுப் பகுதிகளில்படையினரை விடுதலைப் புலிகள் கடுமையாகத் தாக்கி வருவதாக அறிவிக்கப் படுகிறது.

நேற்றும், நேற்று முன் தினமும் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய்கள் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம்என்றும்தெரிவிக்கப்படுகிறது.

படையினர் சுட்டதால் அப்பகுதிகளில் காயமடைந்த 6 பொதுமக்களையும்புலிகள்காப்பாற்றி பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். (உ)

வாழைச்சேனையில் 3 தமிழர் பலி

யாழ்ப்பானம், நவ. 22

முல்லிக்களைப் போல் வேடமணிந்து சென்ற கொமாண்டோப் படையினர் மூன்று தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று வாழைச்சேனையில் நடைபெற்றது.

முஸ்லிம்-தமிழ் மக்களிடையேயிளவை உண்டு பண்ணுவதற்காகவே கொமாண்டோக்கள் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது

பத்துக்கும் மேற்பட்ட கொமாண்டோப் படையினர் முஸ்லிம்களைப் போல் வேடமணிந்து சென்றனர்.

இவர்களில் ஐந்துபேர் ஆயுதம் வைத்திருந்ததாகவும் கூறப்படுகிறது

(உ-10)

முல்லைத்தீவில் மோதல் ஆறு சிப்பாய்கள் மரணம்

ஈ.பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22

முல்லைத்தீவில் முகாம்களை விட்டு வெளியேறியிருக்கும் இராணுவத்தினரை தமது மக்கள் விடுதலைப் படை தாக்கி வருவதாகவும்-

தமது தாக்குதலில் ஒரு கவச வண்டி, ஜீப் வண்டி ஆகியவை சேதமுற்றதாகவும் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் அறிவித்திருக்கிறது.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக ஈ.பி. ஆர் எல். எவ். விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 மணி நேர ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திய சிறிலங்கா அரச படைகள் வெள்ளி காலை பதவியா, கென்ட்பாம், டொலர் பாம், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து ஒரே சமயத்தில் தமது திட்டமிட்ட தாக்குதலை நடத்த வெளியே வந்துள்ளன.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் மினிமுகாம் அமைக்கும் நோக்கில் 8 கவசவண்டிகளிலும் ஒரு ஜீப் வண்டியிலும் வந்த இராணுவத்தினரை எதிர்த்து எமது மக்கள் விடுதலைப் படை காலை ஆறுமணியிலிருந்து எதிர்த்தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கின்றது.

இராணுவத்தினருக்கு உதவியாக 2 ஹெலிக் கொப்டர்கள், 1 பொம்மர் என்பன தாக்குதல் நடத்தின.

இராணுவத்தினருக்கெதிரான சமரில் மக்கள் விடுதலைப் படைத் தோழன் முகுந்தன் (சந்திரசேகரம்) வீரமரணமடைந்துள்ளார்.

இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 4 பொதுமக்களும் பலியாகியுள்ளனர்.

முல்லைத்தீவு இராணுவ முகாமில் சுமார் 2000 இராணுவத்தினரும் இராணுவ தளபாடங்களும் குவிக்கப்படுகின்றன. (உ)

சுபநேரம்

22—11—1986
சனிக்கிழமை

சுபநேரம்:
3. 10 முதல் 4. 40 வரை
ராகுகாலம்:
9.10 முதல் 10.40வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

மட்டக்களப்பில் 3 தமிழ் வர்த்தகர்கள் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு, நவ. 22

மட்டக்களப்பில் மூன்று பிரபல தமிழ் வர்த்தகர்கள் இனந்தெரியாதோரால் நேற்றுக் காலை கடத்தப்பட்டனர்.

இம்மூன்று வர்த்தகர்களும் வழமைபோன்று நேற்று வெள்ளிக்கிழமை மாமாங்கப்பிள்ளையார் கோயிலுக்குச் சென்று விட்டுத் திரும்புகையிலேயே இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டனர்.

கடத்தப்பட்ட வர்த்தகர்களின் பெயர்கள் வருமாறு;

1.ராஜேஸ்வரி ஸ்டோர் உரிமையாளர் கே. சண்முகம்.

2.யானைமார்க்சோடா கம்பெனி உரிமையாளர் கே.இராஜேந்திரம்.

3.ஆஞ்சநேயன் மரக்கால் உரிமையாளர் சண்முகராசா.(உ-எ-21)

★ முல்லைத்தீவில் புலிகள் அதிரடித் தாக்குதல்

காணாமல்போன 12 சிப்பாய்களை தேடிப்பிடிக்கவே ஊரடங்கு

யாழ்ப்பாணம், நவ.22

முல்லைத்தீவு, குருந்தூர் மலைப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த வியாழக்கிழமை நடத்திய திடீர் தாக்குதலில் நிலைகுலைந்து காட்டினில் காணாமல் போனதாகக் கூறப்படும் பன்னிரண்டு சிப்பாய்களைக் கண்டு பிடிக்கவே அங்கு 24 மணி நேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் பட்டதாகத் தெரிகிறது.

இது பற்றிக் கூறப்படுவதாவது:-

முல்லைத்தீவு முகாமில் இருந்து கடந்த புதன் கிழமை வெளியேறிச் சென்ற ஸ்ரீலங்காச் சிப்பாய்கள் குருந்தூர் மலைக் காடுகளில், போராளிகளைப் பிடிப்பதற்காக இரவு முழுவதும் பதுங்கியிருந்தனர்.

இதை அறிந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள், கடந்த வியாழக்கிழமை, பதுங்கி இருந்த சிப்பாய்கள் மீது திடீர் தாக்குதல் நடத்தினர்.

இதனால் நிலை குலைந்து போன சிப்பாய்கள் மோட்டோ குண்டுகளில் புலிகள் மீது தாக்குதல் நடத்தி விட்டு அங்கும் இங்கும் தப்பி ஓடினராம்.

இப்படி ஓடியதில் 12 சிப்பாய்கள் காணாமல் போய் விட்டனராம்.

(8ஆம் பக்கம் பார்க்க)

ஹமீத்--திவாரி பேச்சில் முன்னேற்றம் இல்லை

புதுடில்லி, நவ. 21

'தமிழர் தாயகம்' என்ற கோட்பாட்டில் தமிழர் அமைப்புக்கள் உறுதியாக நிற்கின்ற காரணத்தினால் புதுடில்லியில் அமைச்சர் சாஹுல் ஹமீதுவுக்கும் அமைச்சர் நாராயண் திவாரிக்கும் இடையிலான பேச்சுக்களில் முன்னேற்றம் காணப் படவில்லை

இவ்வாறு புதுடில்லி அரச வட்டாரங்கள் தெரிவித்ததாக 'இந்து' பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

(உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையைப் பிரிக்க முடியாதெனின்

கிழக்கை மட்டும் பிரிப்பது எதற்காக?

'சுவர் இருந்தால் தான் சித்திரம் தீட்டலாம்' என்பது தமிழில் உள்ள ஒரு முதுமொழி. ஒரு இனம் வாழ ஒரு நாடு வேண்டும். இது வெறும் அரசியல் சித்தாந்தம் அல்ல – முதுமொழியை மறந்து நமக்கு 1948 முதல் இற்றைவரை இலங்கையில் நடந்து வந்த நிகழ்ச்சிகள் புகட்டும் பாடம், அனுபவம் கற்றுக்கந்துள்ள அடிப்படை அறிவு இதன் காரணத்தாலேதான் அரசியல் தலைவர்கள் - போராளித் தலைவர்கள் என்பவர்கள்

சிங்களவர் மயப்படுத்துவதற்கே

மட்டுமல்ல – எந்த ஒரு சாதாரணனும் கூட– தமிழர்களின் முதலாவது தேவை என்ன என்ற கேள்விக்கு 'ஒரு தாயகமே' என்று தயங்காதும்–தவறாதும் பதில் சொல்லக்கூடிய நிலை இன்று தோன்றியுள்ளது

இதுவரை இந்தியாவின் முயற்சியால ஏற்படுத்தப்பட்ட பல்வேறு பேச்சுவார்த்தைகளின் போதும் தமிழர்களு ஒரு தாயகம் வேண்டுமென்ற கோரிக்கை சகல தமிழர் அமைப்புக்களினாலும் வலியுறுத்தப்படிருக்கிறது மிகவாதிகள் எனப்பெயர் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினருங்கூட இவ்விடயத்தில் உறுதியாக நிற்பதாக ஒன்றுக்கு பலதடவை திரு. அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிறார்.

தமிழர்கள் 'பட்டனுபவித்த'பின் உணர்ந்த பாடத்தை சிங்களவர் அரசியல் சித்தாந்த ரீதியாக முன்பே தெரிந்து கொண்டார்கள் அதாவது தமிழினத்தை அழித்து ஒழிக்க வேண்டுமானால் அவர்கள் தாயகத்தை இலாதொழிக்க வேண்டும் என்ற அரசியல் சித்தாந்தத்தை திரு. டீ. எஸ் சேனநாயக்காவின் தலைமையிலான சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கமே கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டது அதன் பின் அரசுகள் மாறிவந்த போதும் 'நாடு பிடி படலம்' முற்றுப்புள்ளியில்லாத நெடுங்கதையாக இற்றைவரை தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது

ஜே ஆரின் பருப்பு வேகாது

இந்நிலையில் 'நமக்கொரு நாடு வேண்டும்' என்று கேட்டு நிற்கும் தமிழ் மக்களின் கோரிக்கையை தகர்த்தெறிய தமிழ் ஈழத்தை நான்கு மாகாணங்களாக்கி விடலாம் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்தியாவிடம் 'சமாதானம்' சொல்லியிருக்கிறார் ஒன்று கேட்பவர்களுக்கு நான்கு கொடுக்கிறேனே என்று அவர் செட்டிக்காரன் பாணியில் புளுகவும் கூடும். ஆனால் அவர் பருப்பு இங்கே முது வேகும் நிலையில் இல்லை.

இலங்கையில் தமிழர் தாயகம் வரலாற்று ரீதியாக அமைந்துவிட்டது. மகாவமிச புளுகு, துவேஷம் ஆகியவற்றினூடாகக்கூட இது துலங்குகிறது வெளிநாட்டு வெள்ளையர் ஆட்சி ஏற்பட்டபின் அசைக்கமுடியாத ஆதாரங்களுடன் நிலை நிறுத்தப்படடுள்ளது. இந்தவகையில் 'கிரனெகோர்ன் குறிப்புகள்' இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் மட்டுமின்றி மேற்கே சிலாபம்வரை தமிழர் ஆட்சியிலும் இருப்பதாகக் குறித்திருந்தது ஆகவே வெள்ளையர் ஆட்சிக்கு வருமுன்பே மேற்கே சிலாபத்திலிருந்து வடக்காகச் சென்று –வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய பகுதி தமிழர் ஆட்சியில் உடைமையில் ஒரு தனி நாடடுக்கு வேண்டிய சகல இலட்சணங்களுடனும் தமிழர் தாயகமாக திகழ்ந்திருக்கிறது.

எத்தனையோ பழைய தமிழ், முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கிய புத்தளம் மாவட்டத்தை இப்பொழுது எம்மில் யாரும் தமிழர் தாயகத்தின் பகுதியாக வலியுறுத்துவதை நிறுத்திவிட்டோம். நமது தாயகத்தின் எல்லைகளைக் குறுக்கிவடக்கு. கிழக்கு மாகாணங்களோடு நிறுத்திக்கொண்டோம். அதையும் அழித்தொழிக்கப் புறப்பட்டவர்கள் கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிக்கபோகிறார்களாம்.

அந்த வஞ்சகத்திட்டத்திற்கு ஆதரவுகோர- 1981ம் ஆண்டின் குடிசன மதிப்புப் புள்ளிவிபரம் வருமாறு:-

ஆண்டு	தமிழர்
1921	10 251
1946	146059
1953	167898
1963	246.120
1971	315.560
1981	409.451

மேற்படி புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 1921 ம்ஆண்டில் கிழக்கு மாகாணத்தின் மக்கள் தொகையில் தமிழர் தொகை 53. 5 வீதம். முஸ்லிம்கள் தொகை 39 4 வீதம்– சிங்களவர் தொகை 4 5 வீதம் மட்டுமே ஆனால் 1981ம் ஆண்டு மதிப்பீட்டின்படி தமிழர் தொகை 41 9 வீதமாக வீழ்ச்சியடைந்தது முஸ்லிம்கள் தொகை 32. 2 வீதமாக வீழ்ச்சி அடைந்தது. ஆனால் சிங்களவர் தொகையோ 4.5 வீதத்திலிருந்து 24. 9 வீதமாக உயர்ந்துள்ளது இப்படியான இயற்கைக்கு புறம்பான குடிசன புள்ளிவிபரமாற்றம் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டுமே நிகழ்ந்துள்ளதும் கவனிக்கப்பட வேண்டியது ஆனாலும் கூட 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி கூட சிங்களவர் தொகை தமிழர்தொகையிலிருந்தோ முஸ்லிம்கள் தொகையிலிருந்தோ தனித்தனியாகப் பார்த்தாலும் அதிகமான தொகையாகவில்லை.

இதனால் தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனா கிழக்கு மாகாண முஸ்லிம்களில் ஏதோ விசேட அக்கறை உடையவர் போல நடிக்க ஆரம்பித்தார். அவரிகள் நிலை என்ன என்று கேட்டார். தென்னிலங்கையிலுள்ள தமக்குக்கட்டுப்படட சில முஸ்லிம்களை தூண்டி விட்டார். ஈற்றில் தமிழர் முஸ்லிம் சளிடையே கிழக்கு மாகாணத்தில் மோதல்கள் கூட நடந்தன.

முஸ்லிம்கள் மறுப்பு

ஆனால் தமிழையே தாய் மொழியாகக் கொண்டு பலநூற்றாண்டுகளாக அடுத்தடுத்து சகோதரர்கள் போல வாழும் கிழக்கிலங்கை முஸ்லிம்கள் அரசாங்கத்தின் வலையில் சிக்க மறுத்துவிட்ட நிலையில்– தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து தமிழ் மக்கள் விடுதலைப்போரை மழுங்கடிக்க முடியாது என்ற நிலையில் இப்பொழுது கிழக்கு மாகாணத்தின் மூன்றாவது 'மாகாணம்'— சிங்கள மாகாணம்— உருவாக்க வேண்டும் எனச் சொல்லப்படுகிறது

பிரிவினையில் விருப்பம்

பிரிவினையே பிடியாது என்று கூறுபவர் பிரிவினை தடைச்சட்டம் கொண்டு வந்தவர்— இப்பொழுது கிழக்கு மாகாணம் மூன்றாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று திட்டம் முன் வைத்திருக்கிறார். ஒன்று பட்ட இலங்கை வேண்டும்— பிரிவினை கூடாதென்ற ஜனாதிபதி— தமிழ் மக்கள் ஒற்றுமை கூடாது— வடக்கு கிழக்கு இணையக்கூடாது என்றார்

இவ்விடயத்தில் தமிழரோ முஸ்லிம்களோ அவர் வலையில் விழமாட்டார்கள் என்ற நிலை தெளிவானவுடன் இப்பொழுது கிழக்கு மாகாணம் மட்டும் பிரிபடவேண்டுமென்கிறார். அவர் கூறும் 1981 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீடு கூட முழுக் கிழக்கு மாகாணத்தையும் நோக்குகையில் அவருக்கு சாதகமானதாயிலை என்றவுடன் ஒற்றை ஆட்சியின் காவலருக்கு பிரிவினை எண்ணம் வந்து விட்டது.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து அரசுகளினால் செய்து வரப்பட்ட சூழ்ச்சியின் காரணமாகவே1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு மாகாணத்தில் தமிழர்– முஸ்லிம்கள் எண்ணிக்கை வீழ்ச்சி அடையு சிங்களவர் எண்ணிக்கை கூடிக்கொண்டு வந்தது

காலஞ்சென்ற திரு டீ. எஸ். சேனநாயக்காவின் அரசு நாடு பிடிபடலத்தை ஆரம்பித்தது அவ்வரசின் நிதி அமைச்சராக இருந்தவர் இப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனா. அவ்வரசு கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்த முதலாவது குடியேற்றத்திட்டம் கல்லோயா குடியேற்றத்திட்டம் பட்டியப்பளை ஆறு என்ற தமிழ் பெயர் மறைக்கப்பட்டு கல்லோயா என்ற சிங்களப் பெயர் நிறுத்தப்பட்டது

கல்லோயாக் கதை

இக்குடியேற்றத் திட்டம் பற்றிய திட்டங்கள் அரசினால் தயாரிக்கப்பட்டிருந்த வேளையில் நடைபெற்றதாக காலஞ்சென்ற டாக்டர் இ. மு. வி நாகநாதன் எனக்குக் கூறிய கதை ஒன்று நினைவு கூரத்தக்கது.

இத்திட்டம் பற்றிய விரிவான அறிக்கைகள் அரசினால் தயாராக்கப்பட்டிருந்த காலத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சின் அலுவலகத்தில் அவற்றை டாக்டர் நாகநாதன் பார்த்ததாகக் கூறினார். அவ்வறிக்கையில் கல்லோயா குடியேற்றத் திட்டத்தில் சிங்களவர் ((Sinhalese) குடியேற்றப்படுவர் எனக்குறிப்பிடப்பட்டிருந்ததாம். தமிழரசுக் கட்சி செயலாளராக இருந்த டாக்டர் நாகநாதன் ஏன் சிங்களவர் (Sinhalese) என்க் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று கேட்டதற்கு அது 'சிலனீஸ்' என்ற பதத்தில் ஏற்பட்ட அச்சுப் பிழை' (It is a misprint for the word Ceylonese') என்று சமாதானம் கூறப்பட்டதாம் ஆனால் டாக்டர் நாகநாதன் உடனே கேட்டாராம் இலங்கையில் ஏற்படும் குடியேற்றத் திட்டங்களில் இலங்கையர் அல்லாமல் ஆபிரிக்கரா குடியேற்றப்படுவர்? நீங்கள் சிங்களவர் குடியேற்றத் திட்டத்திற்குத் தான் அடி கோலுகிறீர்கள் என்று தான் கூறியதாக டாக்டர் நாகநாதன் என்னிடம் கூறினார் ஈற்றில் நடந்து முடிந்ததும் அதுதான்

முஸ்லிம்கள்	சிங்களவர்	மொத்தம்
75992	8744	192,821
109024	23456	279,112
135322	46470	354.410
185,750	109,690	546,110
248,567	148,572	717,571
315,201	243,358	976,475

அரசின் புதியதிட்டம் குறித்து ஒரு நோக்கு

செ. கோடீஸ்வரன்

(சட்டத்தரணி)

கல்லோயா குடியேற்றத் திட்டத்தை தமிழரசுக் கட்சி எதிர்த்தது. கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் பெறுபேறுகளை 956 இல் கிழக்கு மாகாணம் உணரக்கூடியதாக இருந்தது.

1956 இல் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து கொழும்பில் நாடாளுமன்ற முன்றலில் தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது அங்கு கட்சித்தொண்டர்கள் மட்டுமே தாக்கப்பட்டனர். ஆனால் கல்லோயாப் பகுதியில் பெரும் இனக்கலவரம் எழுந்தது பல தமிழர்கள் கொல்லப்பட்டும்,உடைமைகள் அழிக்கப்பட்டும் நிலை பெயர்ந்து வெளியேறி [illegible] ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு [illegible] கல்லோயா குடியேற்றத் திட்டத்தை தமிழரசுக் கட்சி எதிர்த்தது. கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் பெறுபேறுகளை 956 இல் கிழக்கு மாகாணம் உணரக்கூடியதாக இருந்தது.

1956 இல் தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்து கொழும்பில் நாடாளுமன்ற முன்றலில் தமிழரசுக் கட்சி நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது அங்கு கட்சித்தொண்டர்கள் மட்டுமே தாக்கப்பட்டனர். ஆனால் கல்லோயாப் பகுதியில் பெரும் இனக்கலவரம் எழுந்தது பல தமிழர்கள் கொல்லப்பட்டும்,உடைமைகள் அழிக்கப்பட்டும் நிலை பெயர்ந்து வெளியேறி [illegible] ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி கிழக்கு [illegible] [illegible] [illegible]

விதிகளைக் கடந்தவர்; புதிய விதி படைக்கிறார்

தொலை நோக்கியாலும் (Telescope) நுணுக்குக்காட்டியாலும் (Microscope) பரபஞ்சத்தையும் நுண்ணுயிர் உறையும் உடல்களையும் ஆராயும் விஞ்ஞானி, மனித நெஞ்சத்தின் வஞ்சனையை சூழ்ச்சியை அளந்து காண்பதற்கு இன்னும் ஒரு கருவியைக் கண்டுபிடிக்கவில்லை. கபடமக் குணங்களை நீக்கி நெஞ்சிலே அருள் ஒளி பாய்ச்சுவதற்கு இன்னும் வழிவகையை ஆராய முயலவில்லை

'இறையியல் சலவாத அறிவியல் மூடத்தனமையது; அறிவியல் சலவாத இறையியல் குருட்டுத் தன்மை வாய்ந்தது' எனக் கூறிய இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய விஞ்ஞானமேதையாகத் திகழ்ந்த ஆல்பேட் ஐன்ஸ்டீன் 'பரந்த வெளியும் காலமும்கூட மனிதனின் மனப்பிரமையின் உருவங்கள் என்று காட்டி விட்டார்.

பொருள்கள் அடங்கியுள்ள அண்டமே இப் பரந்த வெளி பொருள்களில் ஏற்படும் நிகழ்ச்சிக் குறிப்புகள் காலப் பிரமாணத்தால் கணக்கிடப் படுகின்றன. ஆகையால் பரந்த வெளியும் காலமும் மனத்தின் உணர்வால் உண்டாகின்றன என்பதில் அபிப்பிராய பேதம் இருக்க நியாயமில்லையே! அணுவும், அண்டமும், பொருளும் பிரபஞ்சமும், காலமும் வெளியும் மனத்தால் எழுந்த மனத்தானதொரு மாயமாளிகை. புலன்களின் அறிவால் கட்டுப் படுத்தப்பட்ட நமது மனத்தின் உணர்வுக்கு அப்பால் சென்று விட்டால், அணுவுமில்லை, அண்டமுமில்லை, பொருளுமில்லை, இப்பிரபஞ்சமும் இல்லை காலமும் இல்லை இப்பரந்த வெளியும் இல்லை' என 'பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்டீனும்' என்னும் நூலில் லிக்கன் பார்னட் எழுதியுள்ளார்.

உண்மையான முழுமையான அறிவு வடிவான இறைவன் மாற்ற மனத்திற்கு அப்பால் தான் உள்ளான் என்பதை

'மாற்றமனங்கழிய நின்ற
மறையோனே' 'நேச
அருள்புரிந்து நெஞ்சில்
வஞ்சங்கெடப் பேராது
நின்ற பெருங்கருணைப்
பேராறே' என்று பாடினார் மாணிக்கவாசக அடிகள் மேலும் 'மருள் நேக்கு மனத்தை மயக்கற நோக்கி மறுமையோடிம்மையுங் கொடுத்த பொருளனே..." எனவும் 'ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமிலாற் காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ' 'சாதி குலம் பிறப்பென்னும் கழிபட்டுத் தடுமாறும் மனிதரையும் அரவணைத்துத் தொண்டாற்றும் மனித சமுதாயத்தின் சற்குருவாகத் திகழும் அவதார புருஷராய் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைப் பற்றி இந்திய நாட்டின் அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராய்த் திகழ்ந்த பகவந்தம், டி. எஸ்.ஆர். எல்.என் ஐ 1967 ஏப்ரலில் சென்னையில் நடந்த கூட்டத்தில் பின்வரும் ஆறு பேசினார்:—

ஒன்றாகப் பின் ஒன்றாக விதிகளைத் தகர்க்கத்தையும் ஆன்மநேய ஒருமைப் பாட்டையும் நிலை நிறுத்த மனித மனத்தின் மாசு நீங்கி உண்மை அறிவு ஒளிர்ந்திட அன்பும் பகலும் அனவரதமும் அற நெறியில், அன்பால் அனைவரையும் அரவணைத்துத் தொண்டாற்றும் மனித சமுதாயத்தின் சற்குருவாகத் திகழும் அவதார புருஷராய் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவைப் பற்றி இந்திய நாட்டின் அணுசக்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவராய்த் திகழ்ந்த பகவந்தம், டி. எஸ்.ஆர். எல்.என் ஐ 1967 ஏப்ரலில் சென்னையில் நடந்த கூட்டத்தில் பின்வரும் ஆறு பேசினார்:—

> பகவான்
> சத்தியசாயிபாவா
> பிறந்ததினம் நாளை

ஆதிமிலி நாயேனை யல்ல வறுத் தாட்கொண்டு பேதைகுணம் பிறருருவம் யானெனதென் உரை மாய்த்துக் கோதிலமுதானானைக் குவாவுதில்லை கண்டேனே'

என்றும் தாம் தெவிந்த ஞானம் பெற்றமையைப் பாடியருளினார்.

இன்றைய காலகட்டத்தில் குழப்பமும் போரும் பிணக்கும் நிறைந்து எரிமலைபோல் குமுறும் மனித சமுதாயத்தில் சமரச சன்மார்க்கிறார் பாபா அத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றிரண்டை கூறுவதற்கு நான் அவரிடம் அனுமதி பெற்றிருக்கிறேன்

அவர் நிகழ்த்திய அறுவைச் சிகிச்சை ஒன்றை நான் நேரில் கண்டேன் அது முடிந்தவுடன் அவர் என் மகன் பக்கம் திரும்பி 'காயத்தின் மேல் கட்டுப் போடப் பயன்படுத்தும் மெல்லிய துணி இருக்கிறதா?' என்று கேட்டார். அறுவைச் சிகிச்சைக்கான கத்தி, ஊசிகள் ஆகியவைகளைப் படைத்தவரால் அந்த மெல்லிய துணியைப் படைக்க முடியாதா என்ன? 'தந்தை தனையாரைப் பணிபுரியும் விஞ்ஞான நிறுவனத்தில் ஒரு சிறிய மருத்துவவிடுதி இருக்கிறது தொலைபேசி மூலம் தெரிவித்தால் அந்த டாக்டர் இரண்டு நிமிடங்களில் கொண்டு வந்து தருவார்' என்றான் என் மகன். 'இரண்டு நிமிடங்கள் என்பது நீண்ட காலமாக சரி கவனப்படாதே' என்றபடி கையை அசைத்தார். கட்டுப் போடப் பயன்படும் மெல்லியதுணி கையில் தோன்றியது

ஆங்கில மொழியை மிகத் திறமையோடு பயன்படுத்த வல்லமை பெற்றவரான பேராசிரியர் டாக்டர் கோகக் அவர்களுக்கு கூறுவது என்னவென்றால் 'பாபா பௌதிக இரசாயன விதிகளை மீறுகிறார் என்று கூறாமல் பாபா அந்த விதிகளையெல்லாம் கடந்தவர்' என்று அவர் கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன்

ஆய்வு கூடத்தில் நான் பெற்ற பயிற்சியின் மூலமாகவும், தருக்க சாத்திர முறைப்படியுங்கூட இதைப்பற்றி விவாதிக்

கரவைகிழார்

கும்போது, பாபா உங்களையும் என்னையும் போன்றவர் என்று கூறுவதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.

அவர் பௌதிக இரசாயன விதிகளைக் கடந்தவர் என்பது எவ்வாறு? உண்மைஎன்னவென்றால் அவரே ஒரு அதிசய தத்துவம் - அவர் அனைத்தையும் கடந்தவர் — அவர் கடவுள்'

'இது விஞ்ஞானத்தில் மிகவும் வெளிப்படையாகத் தெரிந்த செய்தி. விஞ்ஞானம் படிப்படியாக விரிவடைகிறது களையப்பட்ட கோட்பாடுகளின் வெளிக்கூடுகளே விஞ்ஞான முன்னேற்றம் என்னும் பாதையின் அடையாளங்கள் தெரிந்த தத்துவத்தை விளக்க விதிகள் வரையறுக்கப்படுகின்றன. அறிமுகமான விதிகளால் விளக்க முடியாத ஒன்று வெளிப்படும் போது, விஞ்ஞானி அந்த அனுபவத்தையும் ஏற்றுக் கொள்கிறான்.

அதுவே மற்றொரு விதியாகிறது 'பகவான் விஞ்ஞான விதிகளைக் கடந்தவர். இது விஞ்ஞானத்தின் மற்றொரு விதியாகிறது' என்றார் டாக்டர் பகவந்தம்.

'நித்யத்தை அடையும் வழியைப் புரிந்து கொண்டு அதனைப் பின்பற்றுபவனே உண்மையான அறிஞன் இதனைப் புரிந்து கொள்ள முடியாதவன் மிருகத்தைப் போன்றவன் எனப் பிரகலாதன் கூறினான். சந்தேகம் கொண்டவர்களுக்கு இக்கூற்றினைத் தெளிவுபடுத்துவதற்காக, எனது உடலை வில்லுக்கும் மனத்தை வில்லின் நாணுக்கும், வாழ்க்கையை அம்புக்கும் உவமித்தான்.

'வாழ்க்கை என்னும் அம்பினை மனம் என்னும் நாணில் வைத்து இழுத்து எய்யும்போது உடல் என்னும் வில் வளைவதை நீ காண்பாய். நாணை எந்த அளவுக்கு இழுத்து எய்கிறாயோ அந்த அளவுக்கு நேராக அம்பு செல்கிறது நான் என்னும் மனம் உறுதியாக இருக்க வேண்டும். அதனை தொய்வு விடக்கூடாது.

'மாதவனை அடைவதற்குரிய நேரிய வழி மனத்தை அடக்கி ஆள்வதே என்பது உணர்ந்தப்படுகிறது. எமது நீர்க்குமிழி போன்ற உடலுக்கும் நிலையில்லாத, அடிக்கடி மாறிடும் மனத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதனால் எமது வாழ்க்கையே பயனற்றதாகிறது

'ஜீவன் என்னும் பட்டம் அன்பும் அருளும் நிறைந்த ஈஸ்வரன் என்னும் நூலுடன் இணைக்கப்பட்டுள்ளது ஈஸ்வர

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழர் எதிர்ப்பு இலட்சியம்

இலங்கைப் பௌத்தரோடு ஊறியது

சுவீடிஸ் சமய, வரலாற்றுத்துறை பேராசிரியர் ஷால்க் சொல்கிறார்

"தீவிரவாதிகளான பௌத்த அடிப்படைக் கொள்கையினர் தாங்களே பூமி புத்திரர்கள் என்றும் தங்கள் மண்ணில் தமிழருக்கோ வேறு இன—மதக்குழுக்களுக்கோ இடம் இல்லை என்றும், அவர்களுக்கு என ஒரு மாகாணத்தையோ பிரதேசத்தையோ வழங்குவது கௌதம புத்தர் தமது மரணத்தறுவாயில் இலங்கையின் காவல் தெய்வமாகிய இந்திரனுக்கு (சக்கரவர்) இட்ட கட்டளைக்கு மாறானது என்றும் வாதிடுகின்றனர்.

"துட்டகைமுனு எல்காளனுடன் போருக்குப் போகுமுன் எடுத்த சத்தியப் பிரமாணத்தில்

"நான் இராச்சிய ஆசையால் அல்ல; புத்தர் மதத்தை ஸ்தாபிக்கவே இந்தப் போரில் குதிக்கிறேன் எனவே எனது போர் வீரரின் உடலிலுள்ள கவசங்கள் அக்கினியின் நிறத்தைப் பெறுக' என்கிறான். அவனது மறு அவதாரமாக இந்நாட்டின் தேர்ந்தெடுத்த ஜனாதிபதி தம்மைக் காட்டிக்கொள்கிறார்

"மேற்கூறிய போரின் இறுதியில் கைமுனு பல லட்சம் பேரைக் கொன்றதற்காக மனம்வருந்திய கொன்றிருக்கிறான். பிறர் எல்லாரும் நம்பிக்கையற்றோரும் தீயநெறியினருமே; மிருகங்களுடன் தான் அவர்களை ஒப்பிட வேண்டும். எனவே மன உளைச்சலை நீக்கு என்கிறார்கள்.

"மனுதர்ம சாஸ்திரத்திலே ஆரியர்கள் சூத்திரரை, திராவிடரை இப்படி விலங்குகளாகக் கணித்து எழுதியிருப்பதை அடியொற்றி, அர்த்த சாஸ்திரத்தைப் போல் தர்மசாஸ்திரத்தையும் இலங்கையில் படித்த பிற்காலப் பௌத்த குருமார் இவ்வாறு எழுதினர். மகாவம்ச உரை (டீகா) ஆசிரியர் இதனை இன்னும் விரிவாக எழுதித் தமிழர் குறித்துத் தமது அருவருப்பை வெளிப்படுத்துகிறார்.

தமிழர் எதிர்ப்பு இலட்சியம்

"இவை எல்லாம் உண்மைகளாக இன்றைய பொழுதுக்கோ இடமளிக்கக் கூடாது என்ற கருத்தை நியாயப் படுத்துகிறார்கள் "சாரெக்" (சுவீடன் நாட்டு உதவி நிறுவனம்) வழங்கும் நிதியுதவி போன்றவைகள் தமது பூமி புத்திர இலட்சியத்துக்கு உலகம் வழங்கும் ஆதரவு என்றும் இந்த இனவாதிகள் நிரூபிக்கிறார்கள். ஆகவே நிதி உதவி வழங்கு முன் இலங்கையில் நிலவும் இனப்பூசலின் இருபக்க அம்சங்களையும் அவதானிப்பது அவசியம்"

சுவீடன் நாட்டின் மிகப்பழைய (700 வருட) பல்கலைக்கழகம் உப்சலா. (அங்கு தமிழ் ஆய்வும் நிகழ்கிறது). அங்கு சமயங்களின் வரலாற்றுத் துறைப் பேராசிரியராக விளங்கும் அறிஞர் பீற்றர் ஷால்க் என்பவரே மேற்கண்டவாறு தெரிவித்தார். யாழ்ப்பாணம் வந்து ஒருவாரம் தங்கி இங்குள்ள நிலையை அவர் அவதானித்துச் சென்றார்.

சிங்களவர் மத்தியில் சமயவெறி இனவாதத்தைத் தூண்டப் பயன்படுத்துவதுபோல, இலங்கைத் தமிழரிடையிலும் சைவசமயக் கருத்துக்களோ புராணக் கதைகளோ பேரினத்துக்கு எதிராகப் பகைமையை வளர்க்கப் பயன்படுத்தப் படுகின்றனவா என்ற வினா அவர் மத்தியில் எழுந்திருந்தது

அநகாரிகத் தர்மபாலர் போல நாவலரும் ஆங்கில அரசை எதிர்க்க, தேசிய இன உணர்வைத் தூண்டும் பாதையில் சென்றாரா? என அவர் வினவினார்.

நாவலர் சைவ சமய மறுமலர்ச்சியை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டிருந்தார்; தமிழ் அதற்கு அவசியம் என்ற காரணத்தால் தமிழ் நூல்களை ஆக்கினார். அரசியலில் அவருக்கு நாட்டம் இருக்கவில்லை. அரசாங்க அதிபர் அரசு வழங்கிய நிதியை ஏழைகளுக்குக் கஞ்சி வழங்க பயன்படுத்தத் தவறிய போதும், இராமநாதனைச் சட்டசபை உறுப்பினராக்க வேண்டிய சந்தர்ப்பத்திலும் அவர் ஆளுநர் அரசியலில் தலையிட்டு இருக்கிறார் மற்றப்படி அவருக்கு அரசியல் தலைமை அபிலாஷைகள் இருந்தமின் அல்லது சிங்களவர்களோ தமிழர்களோ தனியே அரசியல் அமைப்பு கோரினார்கள் என்று கருத்தை வெளியிட்டேன்

நாவலர் பற்றி ஆங்கிலத்தில் தகவல் இல்லை

இதனைக் கேட்ட பீற்றர் ஷால்க். நாவலரது கட்டுரைகள், விழாமலர்கள் ஏன் யாழ்ப்பாணத் தவராகிய ஆங்கிலத்தில் வெளியிடப் படவில்லை எனக்கேட்டு குறை கூறினார்

துர்க்கை அம்மன் கோவிலில் தேவி சிங்களவாகனத்தில் இருந்து கொண்டு மகிடாசுரனை வதைப்பதைக் கலைவடிவில் பார்த்துவிட்டு

கலந்துரையாடியவர்: ஆ. சபாரத்தினம்

அதற்கு நவீன வியாக்கியானம் கொடுத்து, இன்று தேவி புலிமீது இவர்ந்து,சிங்கள எருமைகளைக் கடித்துக் குதறும்படி ஏவினாள். என்ற ரீதியில் பிரசாரம் செய்பவர்கள் இந்துக்கள் மத்தியில் இல்லையா என்று கேட்டார்

தமிழரின் விடுதலை இயக்கம் மொழிவாரியானது மட்டுமே. சீக்கிய இயக்கங்கள் அரசியற் பின்னணியில் காணப் படவில்லை— என்னும் கருத்தாக அவர் முன் வைத்தேன்.

பீற்றர் ஷால்க் கூறினார்:

"தேரவாத பௌத்த நாடுகளில் எல்லாம் நவீன பௌத்தம் உத்வேகத்துடன் (அடிப்படை இஸ்லாமிய தீவிரவாதத்தைப் போன்று) அபிவிருத்தியடையும் போக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு நெறியில் வளர்ந்துகொண்டு வந்தவளைதைக் காண்கிறோம். இதனை 'தெற்கு, தென்கிழக்கு ஆகிய நாடுகளில் காணப்படும் பௌத்தமும் நவீனமயமாதலும்' என்ற எனது ஆய்வுரையில் (1985 ஏப்ரல் 15-17 ல் நிகழ்ந்த கருத்தரங்கு ஒன்றில் விரிந்துரைந்துள்ளேன்.

"கொழும்பில் 1984ல் நிகழ்ந்த உலக பௌத்த தோழமை மகாநாட்டில், 1983லிருந்து நிகழ்ந்த இனப்படுகொலைகள் எப்படி அஹிம்சைப் பாரம்பரியமுள்ள பௌத்தர்களால் நிகழ்த்தப்படமுடியும் என்பதற்குச் சாட்டு விளக்கம் கூறுவதை எனது கட்டுரை ஒன்றில் விளக்கியுள்ளேன்

"இலங்கையில் அரசியற் பௌத்தம் என்ற கட்டுரையும் வெளிவந்துள்ளது இது பற்றிப் பேச ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தை நடைபெறாமற் செய்ய இலங்கையின் ஸ்தானிகர் முயன்று தந்தி அடித்ததை எமது நாட்டுப் பத்திரிகைகளில் வெளியிட்டு, அவர் அரசாங்க பிரசுரங்கள் மூலம் தமிழ்த் தீவிரவாதிகள் கொலைஞர், கர்ப்பிணிகளைக்கூடத் தந்திரம் பத்தரண்டினைக் குள்ளாக்குகின்றனர் என்ற பிரசாரம் செய்ததற்கு நான் எதிர் நடவடிக்கை எடுத்தேன்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி ஷெயில் சிங் - பிரதமர் ராஜீவ்

'லடாய்' எங்கே போய் முடியும்?

> இந்தியாவின் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே கருத்து வேறுபாடு கடந்த ஒரு ஆண்டு காலமாக வளர்ந்து வருகின்றது வளர்க்கப்பட்டு, வருகின்றது என்றும் கூறலாம். இந்த வேறுபாடு எங்கு போய் நிற்குமோ என்று இந்திய அரசியல் வட்டாரங்கள் அங்கலாய்க்கின்றன. அது பற்றிய ஒரு சன்னோட்டமே இது

புதுடில்லி இந்துக் கல்லூரிக்கு அண்மையில் விஜயம் செய்தார் இந்திய ஜனாதிபதி ஷெயில் சிங்.

கல்லூரி மாணவர்கள் தமக்குள் நடத்தும் நாடாளுமன்றத்தின் பிரதமருக்கு ஜனாதிபதி ஷெயில் சிங் அறிமுகப் படுத்திவைக்கப்பட்டார்.

"இன்று கல்லூரிக்கு வந்தது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. பிரதமரைப் பார்க்கும் அதிஷ்டம் இன்று எனக்குக் கிட்டியதுதான் என் மகிழ்ச்சிக்குக் காரணம்" — இப்படி ஜனாதிபதி ஷெயில் சிங் தெரிவித்தார்.

பிரதமரை மாணவரின் மூலத்துக்கு இழுத்து ஜனாதிபதி கூறியது அவர் சிரித்துக் கொண்டே அழுவதைக் காட்டுகிறது.

மாணவர்களின் பிரதமரைத் தான் கண்டதை, வைத்து இந்தியப் பிரதமர் காந்திக்கும் தனக்கும் உள்ள கருத்து வேறுபாட்டை நாசூக்காக ஜனாதிபதி வெளிப்படுத்தியதில் நகைச்சுவை மட்டும் மிளிரவில்லை; அவலச் சுவையும் சேர்ந்து காணப்படுகிறது

கடந்த ஓர் ஆண்டு காலமாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்து வருகிறது.

பாட்டனார் நேருஜி பிரதமராக இருந்த போது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்தை வாரம் ஒருமுறை தவறாமல் சந்தித்து உள்நாட்டு வெளிநாட்டு விவகாரங்களைக் கூறி வருவார்.

வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பிய உடன் ஜனாதிபதியைச் சந்தித்து சகல விஷயங்களையும் விளக்குவார்.

அம்மா பிரதமராக இருந்த போதும் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

சஞ்சீவி ரெட்டியுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தும் ஜனாதிபதி என்ற முறையில் அவரை ஒழுங்காகச் சந்தித்து அரசியல் நிலைமை பற்றிய தனது கருத்துக்களை எடுத்துச் சொல்ல இந்திரா தவறவில்லை.

பேரனும் மகனுமான ராஜீவ் காந்தி பிரதமராக வந்த பின்னர் எல்லாவற்றிலும் ஒரு மாற்றம்.

1985 ஜூன் 18 ஆம் திகதியன்று பிரதமர் ராஜீவ் காந்தி அமெரிக்காவில்இருந்து திரும்பியதும் புதுடில்லி விமான நிலையத்தில் வைத்து செய்தியாளர் ஒருவர் கேள்வி கேட்டார்.

"மேமாதம் மாஸ்கோ புறப்படும் முன்னரும் ஜனாதிபதி ஷெயில் சிங் திரும்பிய பின்னரும் ஜனாதிபதியைச் சந்தித்து ஏன் உரையாடவில்லை"- இது தான் அந்தக்கேள்வி.

"நூற்றுக்கணக்கான விஷயங்களில் நான் சம்பிரதாயங்களைக் கைவிட்டு விட்டேன்" —இப்படி திரு காந்தி சொன்ன சமயம், அவர் பிரதமர் பதவியை ஏற்று 7 மாதங்களும் சில தினங்களுமே ஆகியிருந்தன.

ஆம் திரு காந்தி பிரதமர் பதவியை முதல்

தீபன்ராஜ்

தடவையாக ஏற்றதே சம்பிரதாயத்தை மீறிய செயல்தான்

அன்னை இந்திரா கொலைப்பட்டவுடன் மத்திய பிரதேசத்தில் இருந்த திரு காந்தி உடனடியாக வரவழைக்கப்பட்டார். பிரதமராக்கப்பட்டார்.

சம்பிரதாயத்தை மீறி ஜனாதிபதி ஷெயில் சிங் அப்போது நடந்து கொண்டார்

ஒரு பிரதமர் இறந்தால் சம்பிரதாயப்படி என்ன செய்ய வேண்டும்?

அமைச்சரவையில் உள்ள சீனியர்ட் அமைச்சரை பதில் பிரதமராக நியமிக்க வேண்டும். அதன் பின்னர் ஆளும் கட்சிக்கூட்டம் அழைக்கப்பட்டு புதிய தலைவர் தெரிவு செய்யப்பட வேண்டும். அவர் தான் நிரந்தரப் பிரதமராகப் பதவி ஏற்பார்.

அன்று ஜனாதிபதி சம்பிரதாயத்தைப் பார்க்கவில்லை. உணர்ச்சி வசப்பட்டு ராஜீவைப் பிரதமராக்கினார்.

அன்றே தொடங்கியது பிரதமர் பதவியை ஏற்ற ராஜீவ் காந்தியின் சம்பிரதாய மீறல்கள்

ஜனாதிபதி இப்போது ஸ்திரநிலை ஒன்றை எடுத்து உள்ளார் பிரதமரின் நெருக்குதலுக்கு பணிவதில்லை என்று ஜனாதிபதி பிடிவாதம் கொண்டுள்ளார்.

இப்புதிய நிலையை ஜனாதிபதியின் அண்மைக் கால செயல்கள் காட்டுகின்றன.

கடந்த செப்டம்பர் 12 இல் ஜனாதிபதி உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கல்கத்தா சென்றார்.

அடுத்த நாள் பிரதமரின் அலுவலகத்திலிருந்து ஜனாதிபதிக்கு தகவல் அனுப்பப்பட்டது.

'செப்டம்பர் 14 ஆம் திகதி அமைச்சர்கள் பதவி ஏற்க இருக்கின்றனர். ஜனாதிபதி சமூகம் தரவேண்டும்" -என்பதே இத்தகவல்

கல்கத்தாவில் நின்ற ஜனாதிபதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பயணத்தை ரத்துச் செய்ய முடியாது என்று ஜனாதிபதி அறிவித்தார்.

பிரதமரே பதில் அனுப்பினார். செப்டம்பர் 14 இல் புதுடில்லி வந்து பதவிப்பிரமாணஞ் செய்து விட்டு அன்றே கல்கத்தா செல்லலாம்— இதுதான் பிரதமரின் பதில்.

வேண்டுமானால் செப்டம்பர் 15 இல் வருகிறேன் என்று மீண்டும் தெரிவித்தார்.

பிரதமர் இதற்கு இணங்கவில்லை. அமைச்சர்கள் பதவி ஏற்பு நிறுத்தப்பட்டது.

பயணம் போன சமயத்தில் ஜனாதிபதியை இப்படி திருப்பி அழைத்தது 20 மாத காலத்தில் மூன்றாவது தடவையாக இடம் பெற்றது.

ஒரு மந்திரிக்கு விசுவாசப் பிரமாணஞ்செய்து வைக்க மவுண்ட்அபு என்ற இடத்தில் இருந்து ஜனாதிபதி திருப்பி அழைக்கப்பட்டார்.

மிஸோரம் உடன்பாட்டில் ஜனாதிபதிக்கு திருப்தி இல்லை. தீவிரவாதிகளுக்கு பணிந்து பிரதமர் போய் விட்டார் என்பதே ஜனாதிபதியின் நிலை. இது தொடர்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் காரசாரமான சுடிதப் போக்குவரத்து இடம் பெற்றது.

ஜனாதிபதியின் சுதந்திரதின உரையை ஆகாசவாணியும் தூரதர்ஷனும் பதிவு செய்தது இறுதிக்கட்டத்தில் (ஆகஸ்ட் 14) அந்த உரையில் சில பகுதிகள் அகற்றப்பட வேண்டும் என்று பிரதமர் அலுவலகம் அறிவித்தது. ஜனாதிபதி மறுத்து விட்டார். அதன் பின்னர் பிரதமர், அமைச்சர்கள் நரசிம்மராவ், பூட்டாசிங் ஆகியோரை அனுப்பி சம்மதிக்க வைத்தார்.

ஜனாதிபதி தனது குடியரசு தினப்பேச்சை தூரதர்ஷன், ஆகாசவாணிக்குக் கொடுக்க மறுத்து விட்டார். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கெஞ்சிக் கூத்தாடித்தான் ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றன

இப்போது பிரதமர் ஜனாதிபதியுடனான தொடர்புகளை தூதர் மட்டத்திலேயே வைத்து இருக்கிறார் நேரடியாகச் சந்திப்பதில்லை.

பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போது அன்னியோன்னிய மாக நடந்து கொள்வார்கள்.

'ரப்பர் முத்திரை' ஆக இருக்கத்தயாரில்லை என்ற நிலையைத்தான் ஜனாதிபதி கடைப்பிடிக்கிறார்.

ஜனாதிபதி - பிரதமர் இடையிலான இடைவெளி எங்கு போய் நிற்குமோ? இந்திய அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக அடிபடும் பேச்சு இது ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது அருணகிரிநாதர்; அறுபத்து நான்காவது நாயனார்

தேவாரம் என்றால் மூவரும் பாடியது என்று சொல்கிறார்கள். அது முறைப்படி பிழை. அப்பர் பாடிய ஒன்றுக்குத் தான் தேவாரம் என்று பெயர். ஞானசம்பந்தர் பாடியது திருக்கடைக்காப்பு. சுந்தரர் பாட்டுக்குத் திருப்பாட்டு என்று பெயர்.

உலகில் பேசப்படும் மொழிகளுக்குள் தனிச்சிறந்தது தமிழ் மொழியேயாகும். இறைவனுடனே எளிதில் பெறுவதற்கு ஏற்ற மொழியும் தமிழ்மொழியே யாகும். இறைவன் சங்கப் புலவரில் தானும் ஒருவனாயிருந்து தமிழ் ஆராய்ந்தமையாலும், பெற்றான் சாம்பான் பொருட்டு உமாபதி சிவத்திடம் சீட்டு எழுதி அனுப்பியது தமிழிலே யாதலினாலும், சுந்தரருக்கும் சேக்கிழாருக்கும் அருணகிரியாருக்கும் அடிபெடுத்துக் கொடுத்தது தமிழிலேயென்பதாலும் இதன் பெருமை நன்கு விளங்குகின்றது.

கல்வி குறைந்தவன் தம்மினுங்குறைந்த கல்வியுடையவரைக் கண்டு நிருப்தியடையக் கூடாது. தம்மினும் மேலான கல்வியாளரைக் கண்டு தாம் நன்கு கல்வி

பகுதி II

பயிலவில்லையே என்று கருத்தழிந்து மேலும் மேலும் கல்வி நலத்தைப் பெறுதல் வேண்டும்.

மனம் ஒரு கத்தி போன்றது. கத்தி மாம்பழம் அறுக்கவும் உதவும் பிறருடைய தலையை அறுக்கவும் உதவும் அது போல் மனம் நன்மை

வாரியார் பெருமை

நினைக்கவும் ஆகும் தீமை நினைக்கவும் ஆகும் நலம் தீங்கு இரண்டுக்கும் நமது மனமே பரமகாரணம்.

உடம்பை உயிர் செலுத்துகிறது. உயிரை இறைவன் செலுத்துகின்றான். காரை டிரைவர் செலுத்துகின்றான் டிரைவரை எஜமான் செலுத்துவது என்பதுபோல் உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறைவன் டிரைவருக்குள் ரியூப் ரியூப்புக்குள் காற்று, போன்றது

கல்லாதவன் 'ட' என்ற எழுத்தைக் கோடு என்பான். கற்றவன் 'ட' என்றது எழுத்து என்பான். அதுபோல ஞானிகள் எல்லாம் சிவமாகப் பார்க்கிறார்கள் கல்லாதார் தெய்வத்திருவுருவங்களைக் கல், செம்பு என்கிறார்கள்

நமக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. சிவனை நோக்கிச் செல்வது ஆகும் வழி. இயமனை நோக்கிச் செல்வது சாகும் வழி. ஆகும் வழியில் செல்வதாக நினைத்துக் கொண்டு சாகும் வழியில் செல்வோர் பலர் உண்டு ஆகும் வழி வடக்கு நோக்கிச் செல்வது சாகும் வழி தெற்கு நோக்கிச் செல்வது வடக்கே சிவபெருமான் வீற்றிருக்கிறார் தெற்கே இயமன் இருக்கிறான் சிவனை நோக்கிச் சென்றால் கிடைப்பது அவருடைய சரணம் இயமனை நோக்கிச் சென்றால் கிடைப்பது மரணம்.

ஆங்கிலத்துக்கு அகராதி கூறுகிறார் ஒருவன் திருமணம் செய்து மனைவிமக்களுடன் சிவசிந்தையுடன் வாழ்வதுதான் வாழ்வு. அவன் அவர்களுடன் அன்பாகப் பேசி மகிழ்ந்திருப்பான் திருமணம் செய்யாதவன் யாருடனும் பேசுவான். அவன் பேச்சிலர் அதுதான் ஆங்கிலத்தில் Bachelor ஆனது.

'அமரர் வடிவும்' என்றால் ஆங்கிலத்தில் என்ன தெரியுமா? Personality பர்சனாலிற்றி

நமக்கு ரொம்ப உபயோகமானவை சம்சாரமும் மின்சாரமும் இரண்டும் இடக்குப்பண்ணினால் கஷ்டம். ஒன்று தொட்டால் Shock மற்றது தொடாமலே Shock.

இராமன், விஜயன் என்போர் பெரிய வில்லாளிகள். அவர்கள் அம்பு போட்டால் ஒன்று இரண்டாகும் மனமதன் அம்பு போட்டால் இரண்டு (ஆண், பெண்) ஒன்றாகும் அவனுக்குப் பெயர் காமன். எல்லா நாட்டுளுக்கும்

புத்தொளி

எல்லா மொழிகளுக்குமுள்ள அவன் காமன் (Common).

அப்பரின் தேவாரத்தை இசையாகவும் இனிமையாகவும் பாடுகிறார் வாரியார் பாடி முடிந்ததும் தனது தலையைத் தடவுகிறார் கையை உயர்த்தி மேலே காட்டுகின்றார். இது அப்பர் (Upper) பாட்டு மற்றதெல்லாம் lower.

திருப்பாற்கடல் -பெட் அலைகள் - பெட்ரீற், ஆதிசேடன் - கட்வில் துள்ள ஸ்பிறிங், நாகரத்தினம் - பெட்றூம்லேற், நாரதர் - ரான்சிடர் ரேடியோ, லக்ஷ்மி - ஓர் கண்டிஷனாக கால்பிடிக்கும் மனைவி.

இந்த உருவத்தால் புராண காலத்தையும் விஞ்ஞான காலத்தையும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நகைச்சுவை

மாறுபட்ட பொருள்கள் ஒன்றுபட்டால் இன்பம். பல் ஆடாமல் இருக்க நாக்கு ஆடுகிறது. நாக்கும் ஆடி பல்லும் ஆடினால் முறுக்குச் சாப்பிட முடியுமா?

சோமனுக்கு (சந்திரனுக்கு) 27 மனைவியர்! சோமனுக்கு (ஆடைக்கு) 27 மனைவியர்!

வாரியாரின் விபூதிப் பூச்சைக் கண்ணுற்ற ஒரு குறும்பன் கேட்டான் ஏன் வெள்ளை அடித்திருக்கிறீர்கள்? என்றான் அவர் தயங்கினாரா? யோசித்தாரா? வெட்டொன்று துண்டு இரண்டாகச் சொன்னார் குடியிருக்கும் வீட்டுக்கு வெள்ளை அடிப்பார்கள். இது (தமது தலையைக்காட்டி) அறிவு குடியிருக்கும் வீடு. அதனால் வெள்ளை அடித்திருக்கிறேன். காலி மனைகளுக்கு வெள்ளை அடிக்கமாட்டார்கள்

இறைவன் ஒருவரைப் பாலைக் கொடுத்து ஆட்கொண்டான் ஒருவரைச் சூலை கொடுத்து ஆட்கொண்டான் ஒருவரை ஓலை கொடுத்து ஆட்கொண்டான் ஒருவரைக் காலைக் கொடுத்து (திருவடித் தீக்ஷை செய்து) ஆட்கொண்டான்.

ஒரு கிழவர் வயது எழுபது. மனைவியை

(5 ஆம் பக்கம் பார்க்க)

வெளிநாட்டு ஆசையிலே...

வெளிநாட்டு ஆசையிலே
வேதனைகள் பலகோடி
வெந்தபுண்ணில் வேல்போலே
வந்து இங்கு சேர்ந்ததுவே

ஏச்சன்றை நம்பியெல்லோ
எக்கச்சக்கம் காசைக்கட்டி
ஏமாந்து போனசிலர்
எமலோகம் போய்விட்டார்

தாரத்தின் தாலியையும்
தாய்தங்கை நகைகளையும்
பாரத்துக்கு ஈடாகப்
படாப்பாடு படுகின்றார்

நாட்களை யெண்ணியெண்ணி
நாளும் படிஏறிப்
பேய்க்கனவு கண்டவர்கள்
பெற்றதோ பெருங்கடனே

இந்தியா பம்பாயென்று
இன்னும் அலைந்துகொண்டு
இரந்து திரிகின்ற
இலங்கையரை யெண்ணி

ஏங்கும் இதயங்கள்
எத்தனை இங்குண்டு
தாங்கும் இடிதனையும்
தன்மானம் தனையும்

விற்றுப் பணமாக்கிப்
பெற்று இங்குவந்து
பெரியவீடு கட்டுகினம்
'பேசோ'க்காரர் வாங்குகினம்

திரிகின்ற மாப்பிளைமார்
திறன்கள் பெரிதாகும்
புரிகின்ற உண்மையெலாம்
போய்வந்தால் புரிந்துவிடும்

வெளிநாட்டு மோகங்கள்
வெளிக்குவரும் காலத்தில்
வேஷம் கலைந்துவிடும்
விரம் தெரிந்துவிடும்

வ. யோகானந்தசிவம்

காடு சுடுகின்றது என்றான் தளபதி
சுடுகாடாகும் என்றான் மன்னன்

பலவன் மெல்ல மெல்ல மேற்கே நகர்ந்து கொண்டிருக்கிறான்—தமிழ்ப் பெருஞ் சேனையும் மன்கோட்டை நோக்கி மேற்கே விரைந்து கொண்டிருக்கிறது.

சங்கிலி மன்னன் தன் புரவியில் ராஜநடை போட்டுச் செல்ல மன்னனின் இருமருங்கிலும் சேனைத்தளபதி வீரமாணிக்கதேவனும் காவற் படைத் தளபதி பராந்தகனும் சென்று கொண்டிருக்கின்றனர்.

கல்லிடைத்தேவனின் படை பண்ணைத்தறையைக் காவல் செய்ய, புயல் படை கொழும்புத் துறையைக் காவல் புரிய, நாகர நாவாந்துறையை கண்காணிக்க, வேளக்காரப்படை நல்லூர்க் கோட்டையில் தயார் நிலையில் நிற்க, நல்லூர் சைன்யம் பறங்கியரின் மன்கோட்டை நோக்கி ஏறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

சங்கிலி மன்னன் மிகவும் தூரநோக்கு உடையவனாதலால் ஆட்சிபீடமேறியதும் படைபலத்தைப் பெருக்கியிருந்தான். உளப்பலம் உடற்பலம் கொண்டோரைத் தேர்ந்தெடுத்து உடற்பயிற்சி போர்ப்பயிற்சி அளித்து போர்வீரர்களாக உருவாக்கி வித்தைகளும், யுக்திகளும், உத்திகளும் கற்றுக் கொடுத்து பெரும்படையணிகளை உருவாக்கியிருந்தான்.

மேலும் தஞ்சை, இராமநாதபுரத்திலிருந்து இரு படையணிகளைத் தருவித்தும் வைத்திருந்தான். மன்னன் படை பலத்தைப் பெருக்கியது அவனது அண்ணனும் மந்திரியுமாகிய பரநிருபசிங்கனுக்கு அவ்வளவு விருப்பமாகத் தோன்றவில்லையாயினும் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அப்படி வெளிக்காட்டியிருந்தாலும் மன்னன் அதைப் பொருட்படுத்தியிருக்கவும் மாட்டான்.

ம. க. அ. அந்தனிசில்

படையின் பெருக்கம் தான். மன்னன் படை பலத்தைப் பெருக்கியது அவனது அண்ணனும் மந்திரியுமாகிய பரநிருபசிங்கனுக்கு அவ்வளவு விருப்பமாகத் தோன்றவில்லையாயினும் அவன் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அப்படி வெளிக்காட்டியிருந்தாலும் மன்னன் அதைப் பொருட்படுத்தியிருக்கவும் மாட்டான்.

படையின் பெருக்கம் மன்னனின் விருப்பம் என்றுகியிருந்தது நாட்டின் தேவைப்பட்ட பகுதிகளுக்கு படைகளை நிலைகொள்ள வைத்திருந்தான் மன்னன். மன்னாரில் ஓர் கடல்படை! அது வேற்று அந்நியர்கள் முத்துக்குளிப்பில் ஈடுபடாவண்ணம் கண்காணிப்புச் செய்து வந்தது சிங்களநாட்டுப் படை எடுப்பாளர்கள் வன்னி நாட்டைத் தாண்டி யாழ்ப்பாண இராச்சியத்திற்குள் நுழையாவண்ணம் வன்னிநாட்டு எல்லையில் ஓர் எல்லைக்காவற்படை! நல்லூர் கோட்டையில் காவற்படை, போர்ப்படை, புயல்படை, ஒற்றர்படை இவ்வாறாகப் படையணிகளை உருவாக்கி நாட்டை அரண்செய்து வைத்திருந்தான் மன்னன்

இல்லாவிட்டால் வெள்ளைப் பறங்கியர் கீழ்த்திசை நாடுகளை ஒவ்வொன்றாக வீழ்த்தி அடிமைப்படுத்தி வந்தவேளையில் யாரிடம் படையுதவி கேட்டுச் செல்வது? படையுதவி புரிய யார் தான் முன்வருவர்? இதற்கெல்லாம் விடையளிக்குமாப் போல எதிர்கால நோக்குடன் தன் படை பலத்தைப் பெருக்கி வைத்திருந்தான் சங்கிலி மன்னன்.

வெற்றிச் செய்தி

போர்க்களத்திலிருந்து புறப்பட்ட கொக்கு விரைந்து பறந்து கொழும்புத்துறையேகி மன்னன் வெற்றியிட்டிய சேதியைப் பகரக்கரைப்பிட்டி வன்னியனும் படையினரும் கரை ஏறி மகிழ்ச்சியடைகின்றனர் இதனால் களிப்படைந்த கழுகு கொழும்பு துறைக்குப் பறந்தேகி மன்னவனின் வெற்றிச் செய்தியைப் பரிமாற கல்லிடைத் தேவனும் படையினரும் சொல்லொணா ஆனந்தம் கொள்கின்றனர் மேலும் மன்னன் மன்கோட்டையை நோக்கி படை நடத்தி வருவதாகப் பகர்ந்த கழுகு அங்கிருந்து பெயர்ந்து பக்கத்துக் காட்டில் நுழைந்து மன்கோட்டையை ஒரு கண்ணோட்டம் விடச் செல்கிறது.

மன்கோட்டையைச் சூழ அரித்தியான மரங்களிருந்ததால் தூரத்து மரமொன்றில் தன் குடியரையைக் கட்டிய கழுகு மரங்களினூடே மறைந்து மறைந்து சென்று மன் கோட்டையின் வாயிலை எட்டிப் பார்க்கிறது.

தோற்றோடியவர்களை (தற்றி வரவேற்கும் புகலிடமாகவும், முற்றும் காக்கும் அரணாகவும் விளங்கிய மன்கோட்டை வாயிலில் மைாரி இருபதி பறங்கியர் துப்பாக்கியும் கையுமாக நிற்கின்றனர் வாயிலின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த மேசையில் (மேசை, கதிரை, அலுமாரி, வாங்கு ஆகியன போர்ச்சுக்கேய மொழிச் சொற்களாகும்) துப்பாக்கிகள் அடுக்குக்காக வைக்கப்பட்டிருக்கின்றன

அவையாவும் வெடிமருந்து நிரப்பப்பட்ட துப்பாக்கிகள்! இவைகளை நோட்டம் விட்ட கழுகு

ஆதிக்க குணம் அஸ்தமனமாகுமா?

பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர்அரசு (பகுதி : பதினொன்று 'அ')

அங்கிருந்து மெதுவாக நழுவி எதிர்கொண்டு வந்து கொண்டிருக்கும் நல்லூர் சைன்யத்திடம் சகிகதி சொல்வதற்காக கீழ்த்திசை நோக்கிப் பறக்கிறது.

கள்ளிக்கோட்டை, கோகவ, தஞ்சை மன்னர் கோட்டை இராச்சியம் என்று வெற்றி பெற்று தம் பொம்மை ஆட்சிகளை ஆங்காங்கே நிறுவி ஆதாயம் கண்டு சுவை கண்ட வெள்ளைப் பறங்கியர்—

கீழைத்தேச மக்களை அடக்கியொடுக்கி ஆதிக்கம் புரிய புரிய பாடம் கற்றுக்கொண்டு மேலைத் தேசமிருந்து கடல் மார்க்கமாய் வந்தேறிய பறங்கியர்—

ஆதிக்கம் அகங்காரம், பாசாங்கு பகல் மோசடி, சுயநலம் குறு ஆதியாம் குணங்களை தம் விவாபார மூடைகளாகக் கட்டிக்கொண்டு கீழ்த்திசை நாடுகளின் மடிதடவி முடிச்சவிழ்க்க வந்துற்ற பறங்கியர்—

'கொண்டதே கோலம்' எனும் தம் கொள்கை வெற்றிகூட பலகாத தூரமிருந்து படை படையாய்த் தருவிக்கும் மூர்க்கப் பறங்கியர் - எதிலும் இலேசில் விட்டுவிடுவார்களா?

மன் கோட்டைக்குள் சொற்ப பறங்கியர் இருந்தாலும் நாடுபிடிக்கும் கதிப புத்தி அவர்களை விட்டகலுமா? ஒரு பறங்கியின் மனதில் உதித்த ஆதிக்க குணம் தானும் அஸ்தமனம் ஆகிவிடுமா? இல்லை! அதனால் எப்படியும் தமக்குப் படைபலம் வந்து சேருமென்ற குருட்டு நம்பிக்கையில் மன் கோட்டையிருக்கும் கடைசிப் பறங்கி வரை போராடச் சித்தம் கொண்டிருக்கின்றனர்

பறங்கியருக்குப் போதை

தமது தளபதி அன்று பூர்த்தாட் போர்க்களத்தில் இறந்துபோன துக்கத்தையும், தோல்வியால் தமக்கேற்பட்ட தாக்கத்தையும் தாங்கிக் கொள்ள மதுவருந்தி போதையேற்றி மன் கோட்டை வாசலில் வெறி பிடித்து நிற்கின்றனர்.

கீழ்த்திசை நோக்கிப் பறந்த கழுகு பாதி வழி வந்த நல்லூர் சைன்யத்திடம் சேதி சொல்கிறது. அது கேட்டுத் தளபதி வீரமாணிக்கதேவன் தன் சேனையணிகளிடம் முன் னெச்சரிக்கை அறிவுறுத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பண்டிதர் என்றால் பிராமணர்
அவர்களில் விவேகியர் சாஸ்திரி

சேர இராமநாதன் ஆரம்பித்த பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக் கழகமாக மலர்வதற்கிடையில் அங்கே சித்த வைத்திய கலாசாலை, பண்டித ஆசிரிய கலாசாலை முதலிய கலாபீடங்களும் இருந்து வந்தன. பண்டித ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு அதிபராயிருந்த கலாநிதி சிவப்பிரகாசம் அவர்கள், சைவாசிரிய கலாசாலையின் அதிபர், உப அதிபர், பண்டிதமணி ஆகிய மூவரையும் முப்பெரும் தீர்கள் (Three Oelympians) என்று பாராட்டியுள்ளார்

மூவரும் மும்மூர்த்திகள் போல இருந்து பாடஞ்சொல்லிச் சைவாசிரிய கலாசாலையை அலங்கரித்தகாலம் உண்மையில் ஒரு பொற்காலமேயாம். சமீப பரணக்கிரரை ஒத்த இவர்களின் போக்கும் பொய்யா மொழிப்புலமையும், நடுநின்ற நன்னெஞ்சும் இன்னும் பிறவும் இயம்ப முடியாத இலட்சணங்களாகும்.

மூதறிஞர்கள்

இவற்றாலும் இன்னபிற காரணங்களினாலும் இவர்களிடம் பயின்ற ஆசிரியர்கள் இவர்களை முக்கூடர்கள் எனவும் முக்கண்கள் எனவும் மூதறிஞர்கள் எனவும் போற்றிப் பணிந்து நடந்தார்கள். முன்னர் ஆசிரியர்க்கான பயிற்சியளிப்பதில் தனியாய கலாசாலைகள் என நிலவிய கலாநிலையங்கள் யாவும், நாளடைவில் சைவாசிரிய கலாசாலைக்கு முதலிடம் கொடுத்துப் பின் நிற்கலாயின.

சைவாசிரிய கலாசாலையில் பண்டிதமணி அவர்களின் சேவைபற்றிக் கலாநிதி. சிவப்பிரகாசம் அவர்கள் குறிப்பிட்டபோது, "சைவாசிரிய கலாசாலையை அதன் பாலியப் பருவத்திலிருந்தே வளர்த்து உயர்சிறப்பெறச் செய்து, நன்மதிப்புக்குரியதாகச் சிறந்து விளங்க வைத்த நிரர்கள் மூவருள் பண்டிதர் அவர்களும் ஒருவராவர்.

இவர்கள் மூவரும் கலைஞராய் விளங்கினர். இவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் மாணவர்களுக்குப் போதிக்கத் தகுந்த கருத்தாழமுடைய தமக்கேசொந்தமான விஷயங்கள் இருந்தன

இவர்களின் போதனா முறை இலகுவும் கவர்ச்சியும் தாராளமும் வாய்ந்த விளங்கியமை மாணவர்களை இவர்கள்பால் ஈர்த்தன

● க. சி. குலரத்தினம் ●

ஆராமை கொள்வதிலும் கவிபயில்வதிலும் ஊக்கம் மிகுவதிலும் வசியப்படுத்தியே விட்டது.

மூவரும் நன்கான உயரிய வாழ்க்கை முறையால் கலாசாலைக்கு ஒரு பாரம்பரியமான பண்பாட்டை அளித்துவிட்டார்கள். இந்தக் கருத்தாக்கள் மூவரும் ஏக காலத்திலே (அதுவும் நீண்டகாலமாக சைவாசிரிய கலாசாலை மாணவரின் ஒழுகலாறுகளுக்கு வருங்காலத்துக்கும் வழி செய்து கொண்டிருந்தார்கள்."

சுவாமிநாதன் பண்பு

அதிபர் சுவாமிநாதன் அவர்கள் தம்முடைய உதவிப் பேராசிரியர்களை வெகு கௌரவமாகவே நடத்தி வந்தார்கள். தம்மிலும் பார்க்க வயசால் இளையவரும் தம்முடைய மாணாக்கராயிருந்த வருமான உப அதிபர் கைலாசபிள்ளை அவர்களை ஒரு மூலையில் அடக்கி ஒடுக்கமாக ஞானவொடுக்கத்தில் இருந்தாற் போலமர்ந்து படித்துக் கொண்டோ சிந்தித்துக் கொண்டோ இருக்கும் போது, கல்வித் திணைக்களத்தார் சம்பந்தமான ஏதாவது கற்று நிருபத்தையோ, அறிக்கையையோ கையிலேந்திய வண்ணம் அவர்களிடம் சென்று அவரிடம் அவர்களும், பண்டிதமணி, ஆசிரிய இலக்கணப்பற்றி நீண்டு

(6 ஆம் பக்கம் பார்க்க)

பண்டிதமணி வரலாறும் காலமும்

என்ன கருதுகிறீர்கள்?" என்று அமைதியாகக் கேட்பது வழக்கம். அதிபர் அவர்கள் உப அதிபர் அவர்களையோ பண்டிதமணி அவர்களையோ எப்போதாயினும் தம்முடைய அலுவலகத்துக்கு வருமாறு ஆளனுப்பி அழைத்தமை கிடையாது.

பண்டிதமணி அவர்களைப் பற்றி அதிபர் அவர்கள் குறிப்பிட்டபோது, "பண்டிதர் என்றால் கணபதிப்பிள்ளை அவர்களையே கருதி வந்தோம் இந்நிலையில் பண்

முப்பெரும் தீரர்கள்

டிதர் அவர்களின் விசேட அறிவு, ஆற்றல்களையும் மதிப்பையும் காட்டுவதாகும் வட இந்தியாவில் பண்டிதர் எனப்படுவார் பிராமணர்களாகவே இருப்பார்கள். அவர்களுள்ளும் அதிகம் படித்த அதி விவேகிகளுக்குச் சாஸ்திரி, சரஸ்வதி, மகாபாத்தியாய என்ற பட்டங்களுமுண்டு நான்காசி மத்திய இந்துப் பல்கலைக் கழகத்திலே பயின்ற காலத்தில் பண்டிட்ஜி என்று அங்கே அழைக்கப் பெற்றவர் மதன் மோகன் மாளவியா அவர்களே.

பண்டிதர் என்றால் கணபதிப்பிள்ளை

இப்பொழுது பண்டிதர்களும் வித்துவான்களும், பண்டிதமணி, ஆசிரிய

காலத்தால் அழியாத
வரலாற்றுக் கடிதங்கள்

உலகம் முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆளும் கொள்கை (பகுதி இரண்டு)

உலகம் முழுவதையும் ஒரு குடை நிழலில் ஆளுவது என்ற எண்ணம் ரோமாபுரிக்கு மட்டுமே உரியது என்று சொல்வதற்கில்லை.

பண்டைய சீனாவிலும் இந்தியாவிலும் இதையே காண்கிறோம். காஸ்பியன் கடல் வரையில் பரவியிருந்த சீனராஜ்யம் ரோமராஜ்யத்தை விடப் பெரிதாக இருந்ததென்றே சொல்லவேண்டும் சீன சக்கரவர்த்தி 'தெய்வ குமாரன்' என்று அழைக்கப்பட்டார் அவர் உலகம் முழுவதும் ஒரு தனிச் செங்கோல் செலுத்தும் ஏக சக்ராதிபதி என்றே கருதப்பட்டார்.

பல ஜாதியரும் ஜனங்களும் அச் சக்கரவர்த்திக்குக் கீழ்படாமல் தொந்தரவு கொடுத்து வந்தது வாஸ்தவமே. ஆனால் அவர்கள் எல்லோரும் காட்டுமிராண்டிகள் என்று அழைக்கப்பட்டனர். ரோமர்கள் வடஐரோப்பியரை ஆளுப்பது போல்.

இவ்விதமே இந்தியாவிலும் ஆதிகாலத்திலிருந்து 'ஒரு நாயகமாய் ஓட உலகுடன் ஆண்ட' வர்களென்று கருதப்படும் சக்கரவர்த்திகளைப் பற்றிக் கேள்விப்பட்டு வருகிறோம்.

உலகத்தைப் பற்றி அவர்கள் அறிந்திருந்தது மிகவும் குறைவு என்றே கூறவேண்டும். இந்தியா பெரிய நாடாகையால் அதுவே அவர்களுக்கு உலகமாகத் தோன்றியது

இந்தியா முழுவதையும் ஒரு குடை நிழலில் ஆளுவதையே அவர்கள் பரதன் நம் தேசத்தில் அத்தகைய ஏக சமாதிபத்தியம் செலுத்தினான் என்று கருதப்படுகிறது. அவன் பெயரால்தான் நம் தேசம் பாரதவர்ஷம் என்று அழைக்கப்படுகின்றது தருமராஜாவும் அவனது தம்பிமாரும் இந்த உலக ஏகசக்கராதிபத்தியத்துக்காகத் தான் போயிட்டார்கள். என்று மகாபாரதம் கூறுகிறது.

திக்கு விஜயம் செய்து பகைவர்கள் எல்லாரையும் வென்று செய்யும் அசுவமேதயாகமும் இந்த உலக ஆதிபத்தியத்தின் அடையாளமாகவே விளங்கியது.

அசோகனுக்கும் முன்பில் இந்த எண்ணம் இருந்திருக்கலாம். ஆனால் பிறகு அவன் இரக்க மிகு

நேருவிடம் இருந்து இந்திராவுக்கு

உலகம் பூராவையும் ஆளுவதென்று கருதினார்கள் வெளியிலிருந்த மற்றவர்களை இவர்களும் காட்டுமிராண்டிகள் அல்லது மிலேச்சர்கள் என்று அழைத்தார்கள்.

கதையில் வருகின்ற தியாக போர் செய்வது அறவே கூடாது என்று நீக்கி விட்டான். அசோகனுக்குப் பின் இந்தியாவை ஆண்டகுப்தர்களைப் போன்ற சக்கரவர்த்திகள் இந்த எண்ணம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழலும் நிஜமும்

குறுநாவல்

வி.எஸ்.சுப்பிரமணியம்

மாஸ்டரின் மௌனம்

நேற்றைக்கு அந்தச் ஸ்ரீதரன் மாஸ்டர் வந்திருந்தார் என்னைச் சின்ன வகுப்பிலிருந்தே படிப்பித்தவர் அதுமில்லாமல் நான் எஸ். எஸ்.எல்.சி வகுப்பில் படிக்கும் போது கொஞ்ச நாட்கள் எனக்கு டியூசன் சொல்லித்தந்த பழக்கத்தில் ஒடும்ப நண்பரானவர்

அப்பாவின் போக்கே ஒரு தனி அவருடைய மனதில் இடம் பிடிப்பது மிகவும் கஷ்டம். எப்படியோ தெரியாது. ஸ்ரீதரன் மாஸ்டரைப் பற்றி அப்பாவின் மனதில் நல்ல அபிப்ராயம் தோன்றிவிட்டது. அவரது பழக்கம் கொஞ்ச நாட்கள் தானென்றாலும் மனதில் அது அப்படியே பசுமையாக இருக்கிறது. தான் ஒரு இலட்சியவாதி முற்போக்குக் கொள்கைகளை மதிப்பவன் என்று என்னைப் பற்றி அவர் அடிக்கடி சொல்லிக் கொள்வதுண்டு.

பாடசாலை வாழ்க்கைப் பராயத்தில் இரவில் தனிமையில் படுக்கையில் நித்திரை வராமல் புரண்டபோதெல்லாம் அவரின் சுவர்ச்சிறான முகமும் இனிமையான பேச்சும் மனக்கண்ணில் தோன்றி இனம் புரியாத ஒரு இன்ப உணர்வில் மூழ்கி முக்காடியதுண்டு

அவரை வாழ்க்கைத் துணைவனாக அடைய முடிந்தால்? இப்படி எத்தனையோ தடவைகள் அடி மனத்தில் எண்ணச் சூழல்கள் எழுந்து என்னைக் குழப்பியதுண்டு. ஆனால் அடுத்த கணமே நீர்க் குமிழிகள் கணத்துள் மறைவதுபோல அந்த எண்ணம் மறைந்து அவரெங்கே? நானெங்கே? கைநிறையச் சம்பளம் பெறும் அவர் நிறைந்த ஸ்ரீ தனத்துடன் பெண் தேட நினைக்காமல் இருப்பாரா? என்று இன்னொரு கோணத்தில் எண்ணங்

அத்தியாயம் இரண்டு

கள் சென்று விடும்.

அவருக்கும் என்னைப் பற்றி மனதில் ஒரு சலனம் இருந்திருக்குமோ? இல்லாவிட்டால் அவரது பேச்சும் பார்வையும் என் இதயத்தை கனிவாக இருந்திருக்கவேண்டும். இப்படித்தான் அன்றைக் கொருநாள் பாடசாலையிலிருந்து திரும்பும் போது திடீரென்று பிடித்துக் கொண்ட மழையில் நனைந்து அவர் வீட்டு வாசலில் ஒதுங்க நேர்ந்தபோது இடம் தந்து, தலையைத் துவட்டிக் கொள்ளத் துண்டு தந்து, வீட்டுக்குப்போய்ச் சேரத் தன் குடையையும் தந்து அனுப்பினாரே? அவர் ஏதோ என்மேல் ஒரு தனிப்பட்ட அக்கறை கொண்டிருந்தாகவே எனக்கு எண்ணத் தோன்றியது.

உரையாடும் போது கூட இரண்டு அர்த்தம் படும்படி ஏதேதோ பாரே!... ஆனால் ஏதோ ஒன்றை, மனம் திறந்து சொல்ல முடியாமல் அவர் தவித்ததை நான் பரிபூரணமாக உணர்ந்தேன். நானும் கூட என் நினைப்புகளை வாய் விட்டுச் சொல்லமுடியாத ஒரு தயக்க உணர்வில் தானே தடுமாறினேன்.

மனதுள் ஆசைக் கனவுகள் விகவருபம் எடுத்து வளர்ந்து வாட்டினாலும் அவர் என்னைப் பற்றி என்ன நினைப்பார் என்ற தயக்கம் என் நாவைக் கட்டிப்போட்டது. என்ன இருந்தாலும் நான் ஒரு பெண். ஆனால் இவர் தன் மனதைத் திறந்து காட்ட ஏன் இப்படித் தயங்குகிறார் இப்படியே ஒருத்தருக்கொருத்தர் ஊமைகண்ட கனவு போன்று உள்ளத்து எண்ணங்களை மனதுள்ளேயே புதைத்து மறைத்து தயங்கிக் கொண்டிருந்தால் இலவு காத்த கிளியின் கதையாக முடிவு அமைந்து விட்டால்?...

எண்ணங்கள் எத்தனையோ புறங்களிலிருந்து எத்தனையோ கதைகள் கூறினாலும் வாய் விட்டு யாரிடம் கூறமுடியும் அவரிடம் என்னால் எப்படி வாய் திறந்து கூற முடியும். ஒரு வேளை அவர் மனதில் அப்படி ஒரு எண்ணம் இல்லாமல் இருந்திருந்தால் என்னை எந்த நிலையில் வைத்துக் கணிப்பார்?

> "என்னை யாரோ ஒருவர் பெண் பார்க்க வருகிறார் என்று சொல்லலாம் என்று பார்த்தால் எதற்கும் விதிவிளையாடுகிறதே! அவர் லீவிலே ஊருக்குப் போய்விட்டாராம்"

எண்ணங்களில் மூழ்கித் தத்தளித்தேனே யன்றி துணிவாக என்னால் வாய் திறந்து எதுவும் அவருடன் பேச முடியவில்லை.

நான் ஒரு பெண். அதிலும் நகரத்து நாகரிகச் சூழ்நிலையில் கெடுப்பழக்கமில்லாமல் இந்தக் கிராமத்துக்குள்ளேயே என்னைச் சுருக்கிக் கொண்டவள்.

இருவரும் ஒருவரின் மேல் ஒருவர் ஏதோ அக்கறையான தொரு பரிவுணர்ச்சி கொண்டிருந்தோம் என்பது மட்டுமொரு மறுக்க முடியாத உண்மை

தனிமையில் சந்திக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானாலாவது வெட்கத்தை விட்டு என் மனநிலையைத் திறந்து காட்டி விடத் துடித்தேன். இவ்வளவு படித்த ஒருவர் இவ்வளவு தூரம் சங்கோஜியாக இருக்கிறாரே என்று நினைக்க அன்றைக்கு எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

இப்படியாக நாங்கள் இருவருமே சமூகத்துக்காக, அதன் கட்டுப்பாடுகளுக்காகப் பயந்தோ அல்லது தயங்கியோ எங்களை நாங்களேமாற்றிக்கொண்டே வந்தோம் ஆனால் இவையெல்லாவற்றையும் இப்பொழுது நினைக்க மனது வெம்புகிறது அந்தச் சம்பவங்களையெல்லாம் இப்போது எதற்காக என் மனது அசை போடுகின்றது? நான் இப்போது இருக்கின்ற நிலையில் பழைய நினைவுகள் மனதுக்கு இன்னும் கூடுதலான கஷ்டத்தையல்லவா கொடுக்கிறது.

என் மனப் போராட்டங்களையும், மனவேதனைகளையும் உணரக் கூடிய மனநிலை இங்கு யாருக்கு உண்டு? இப்படித்தான் நாலரை வருடங்களுக்கு முன்னால் ஒரு நாள் திடீரென்று அப்பா என் திருமணப் பேச்சை எடுத்தபோது நான் திக்கு முக்காடிப் போனேன்.

ஏதோ ஒரு வகையில் எனக்கு வழி பிறக்கப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முடிவு காலம் வந்ததாக குட்டி யானைகள் நினைப்பு

கூட்டத்தைப் பிரிந்த குட்டி யானைகள் (பகுதி: II)

புல் முடிந்து காடு தொடங்கும் இடத்தில் ஒரு அதிசயமான கிழட்டு யானை ஒன்றை அவை கண்டன. ஒரு மரத்தின் கீழ் அது நின்றது.

இந்தக் கிழட்டு யானை மிகப்பெரிய யானை மிகவும் வயதேறிய யானை அதன் சருமத்தில் சுருக்கங்கள் நிறைந்திருந்தன. ஆயிரக்கணக்கான சுருக்கங்கள்

தடித்த பெரிய தந்தங்கள் உடையது அந்

யானை. நிலத்தை முட்டும் அளவிற்கு அதன் தந்தங்கள் வளர்ந்து வளைந்திருந்தன

கி...ர்.. ர்...

பெரிய யானை தொண்டையால் உறுமியது

இரண்டு குட்டி யானைகளும் தமது தாய் யானைகளிடம் ஓடிச்சென்றன

'அது யார் அம்மா? போய்விடுங்கள் என்று உறுமும் அது யார் அம்மா' என்று அவை கேட்டன.

தாய் யானைகள் நிமிர்ந்து பார்த்தன.

'அதுஒரு முதிய யானை. விவேகமான யானை ஆனால் யானைக் கூட்டத்துடன் அதற்கு ஒத்துப் போகவில்லை. அந்த விவேகமும் அதற்கு இல்லை. ஆகவே அது தனிப் பயணம் செய்கின்றது அதுவே அதன் கூட்டமாகும்'

'ஆ! அதுவே அதன் கூட்டமா?' இரண்டு குட்டி யானைகளும் கூறிக் கொண்டன.

பின் அவை தமக்குள் இரகசியமாகப் பேசிக் கொண்டன 'நாமும், நாமே தனித்த கூட்டமானால் என்ன?'

அவை மீண்டும் தனியாக நடைபோட்டன சமவெளியைக் கடந்து காட்டுக்குள் சென்றன

'இப்பொழுது நாம் இருவருமே தனித்த கூட்டமாகியுள்ளோம்' என்று அவை கூறிக் கொண்டன. வளர்ந்து விட்டது போல அவை சந்தோஷத்துடன் நினைத்துக்கொண்டன

அவை யானைப் பாதையில் சென்றன. இறுதியில் காட்டுத் தடாகம் ஒன்றை வந்தடைந்தன.

நீர்க் கரைக்கு அவை சென்றன. பளபளக்கும் கருநிறக் காட்டு மிருகம் ஒன்று கரையேறிக் காட்டுக்குள் போய்க்கொண்டிருந்தது.

'அங்கே பார். அது எங்களுக்குத் தடாகத்தை விட்டுச் செல்கின்றது. அதற்கு நாங்கள் பெரிய யானைகள் என்பது தெரியும். தனித்த கூட்டம் என்பதும் தெரியும்.' இரண்டு குட்டி யானைகளும் பேசிக் கொண்டன

பின்னர் அவை நீர் அருந்தின. தும்பிக்கைகளால் நீரை ஊதின. மாறிமாறித் தமது தலைகளில் வீசி அடித்தன.

நீரை அடித்து நன்கு விளையாடின.

விரைவில் இரவாகியது யானைகள் இரவில் தான் நடைப்பயணம் செய்வது வழக்கம். அவை தனியாக நடந்து சென்றன. மர இலைகளை உண்டன. ஆனால் அவை பாதையில் மரக்கிளைகளை விட்டுச் செல்லவில்லை

'யானைப் பாதையைத் துப்பரவாக விட்டுச் செல்லவேண்டும். அப்பொழுதுதான் ஆபத்தென்றால் நாம் வேகமாக ஓட முடியும் எதிரிகளுக்கு அது தெரியும். நாம் இப்பொழுது ஒரு கூட்டந்தானே!' அவை தமக்குள்திருப்தி அடைந்தன

அதிகாலையில் அவை ஒரு பரந்த வயலுக்கு வந்தன. வரிசை வரிசையாகப் பச்சை நிறப் பொருள்கள் இருந்தன.

அது புல் அல்ல' யானைப் புல்லும் அல்ல. மிகவும் உருசியாக இருந்தது. அவை தண்டுகளை உண்டன. கடினமான பகுதிகளைத் துப்பின.

'இது மிகவும் நல்லது எமது பெரியவர்களின் கூட்டம் ஏன் இங்கே வருவதில்லை என்று தெரியவில்லை' என்று அவை கூறின.

ஆனால் சடுதியாகடும்டுமீல் என்று சத்தம் கேட்டது காதிறைக் கிழித்துக்கொண்டுஏதோ

பறந்து வந்தது முதலாவது குட்டியானையின் காதைத் தாக்கியது. 'ஐயோ, நோகின்றதே' என்று அது கத்தியது

அவை பாதையால் கீழே ஓடின. மிகவும் அடர்த்தியான காட்டுக்குள் ஓடின.

'காது இன்னும் நோகின்றது' காயமுற்ற குட்டி யானை கூறியது

'இது சந்தோஷமாய் இங்கே இங்கு விளையாடுவதற்கு யாரும் இல்லை. உரையாடுவதற்கு யாரும் இல்லை நாங்கள் ஒய்வெடுக்கும் போது காவல் புரிவதற்கு யாரும் இல்லை' என்று அது கூறியது.

புண்பட்ட காதைத் திரும்பிப் பார்க்க அது முயற்சித்தது.' மனிதர் தான் இதனைச் செய்திருக்க வேண்டும். அவர்களுடைய மணத்தைக் கூட எமக்குத் தெரியாது. இது நடக்குமென்று அம்மா எமக்குச் சொல்லித்தரவில்லை. இப்பொழுது நாம் என்ன செய்வது?'

இரண்டு குட்டி யானைகளும் பெருமூச்சு விட்டன. நாம் அங்கே போவோம். அந்தக் கூட்டத்துக்கு நாம் போனால் எமது கூட்டத்தை நாம் காணமுடியும்'

குன்றை நோக்கி இரண்டும் நடைபோட்டன.

ஆனால் சடுதியாக பயங்கர உறுமல் சத்தம் ஒன்று கேட்டது.

அவை மேலே பார்த்தன. பாறைச் சரிவில் ஒரு சிங்கம் நின்றது. மிகப்பெரிய சிங்கம். இரண்டு குட்டி யானைகளும் தமது வாழ்க்கையில் இப்படிப் பெரிய சிங்கத்தைக் கண்டதில்லை.

சிங்கம் கர்ச்சித்தது. சிங்கம் நேரே அவற்றின் மீது பாய்ந்தது.

என்ன நடக்கின்றது என்று அவை நினைப்பதற்கு முன் அவற்றுக்குப் பின்னாலிருந்து இன்னொரு உறுமல் கேட்டது.

அவை சுற்றிப் பார்த்தன. பெரிய நரை நிற யானை ஒன்று அவற்றை வீழ்த்திக்கொண்டு சிங்கத்தின்மேல் பாய்ந்தது.

(வளரும்)

வி. சின்னத்தம்பி

பாய்ந்தது கூட்டம்

மேய்ந்து நின்று மேய்ந்து நின்று
மெல்லச் சென்றது கூட்டம் - அது
மேயும் செம்மறிக் கூட்டம்!

காய்ந்து போன புல்லை மெல்லக்
கடித்து நின்றது கூட்டம் - அது
கத்தும் செம்மறிக் கூட்டம்!

சாய்ந்து நின்று தலை குனிந்து
சரிந்து சென்றது கூட்டம் - அது
சிறிய செம்மறிக் கூட்டம்!

பாய்ந்து வந்தொரு நாய் குரைத்தது
பயந்து விட்டது கூட்டம் - உடன்
பாய்ந் தெடுத்தது ஓட்டம்!

- ஸ்ரீகணேசன் சுந்தரலிங்கம்

சத்திய சாயி பாபா பெண்களுக்குக் கூறும் புத்திமதி

பெண்களுக்கே போட்டியும் பொறாமையும் அதிகம் வரும். ஆனால் பொதுச்சேவையில் வரும் பெண்கள் அதை அறவே அழித்திட வேண்டும். சேவை செய்வதற்கு ஒரு வரம்பு இல்லை. எந்த விதமான தொண்டும் செய்யலாம்

உன்னுடைய கடமையைச் செவ்வனே செய். பேருக்கும் புகழிற்கும் ஆசைபடாதீர்கள். தொண்டு செய்வது கடவுளால் உங்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு வரப்பிரசாதம்.

மனதில் தூய்மையான எண்ணங்கள் எளிமையான சுபாவம் அன்பு பொழியும் மனம் செய்யும் தொண்டில் ஓர் ஆத்ம திருப்தி இவைகள் ஒரு சேவகிக்கு அவசியம்.

மனதை ஒரு இசை நாற்காலி போல் மாற்றிக் கொண்டு இருக்காதீர்கள் நம்மிடம் இருப்பது ஒரே ஒரு மனம் தான்.

பெண்களுக்கு ஒற்றுமை மனப்பான்மை, பொறுமை, சகிப்புத் தன்மை ஆகியன மிக அவசியம்.

அருவை தான் என்ற அகங்காரம் கெட்ட எண்ணங்களை ஒழித்திட வேண்டும். நூறு ஆண்கள் எளிதில் ஒன்று சேர்வார்கள் ஆனால் மூன்று பெண்கள் ஒன்று சேர மாட்டார்கள் என்பதை மாற்றவேண்டும்.

தொண்டில் சத்தியம் இருக்க வேண்டும். இலட்சியம் பிடிப்பு இருக்க வேண்டும். பொதுச் சேவையில் பிறர்மதிக்காவிடின் கட வருந்த வேண்டாம். கடவுள் உங்களை அங்கீகாரம் செய்வார்.

மனதில் எப்பொழுதும் அன்புப்பிரவாகம் இருக்க வேண்டும். அன்பு இல்லாத மனம் கருநிலமில்லாத ஒரு பாடலைப் போல. செய்யும் ஒவ்வொரு சேவையும் கடவுளுக்கு நாம் செய்யும் தொண்டு என நினைத்துக் கொள்ளுங்கள். ✶

பெண் பார்க்கும் படலம்

பேன் பார்க்கும் குரங்காவதேன்?

-எந்தப் பெண்ணுமே தனக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறாள்

பெண் குழந்தை பிறந்தால் பெற்றதாயே சலித்துக் கொள்கிறாள்

பெண் பிறப்பு என்ன இப்படிப்பட்ட பிறப்பா?

தாய் என்கின்றோம். சக்தி என்கின்றோம். ஆனால் குழந்தை மட்டும் பெண்ணாகப் பிறக்கக் கூடாது என்று ஆசைப்படுகிறோம்.

எனக்குப் பொறுத்த வரையில் பெண் பிறந்தால் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பெண்ணைக் கட்டிக் கொடுத்தாலும் தன்னாதரவு காலத்தில் காப்பாற்றுவாள்.

ஆண் பிள்ளையோ மனைவி வந்துவிட்டால் அப்பனை வீட்டை விட்டுக் கூடத் துரத்தி விடுவாள்.

பெண் குழந்தையின் பாசமும் பரிவும் ஆண் குழந்தைக்கு வராது.

ஒரு வயதுப் பெண் குழந்தைக்குகூட தாய் தகப்பன் மீதிருக்கிற பாசம் தெய்வீகமாக இருக்கும்

அதன் இரத்தம் இரக்கம், கருணை பாசங்களாலே உருவானது

மேல்நாட்டுப் பெண்மைக்கும் இந்தியப் பெண்மைக்கும் உள்ள பேதம் இதுதான்

மேல்நாட்டுப் பெண்மை ஒரு இடத்திலும் உறவு பாசம் வளர்த்துக் கொள்வதில்லை.

அது தண்ணீரிலிட்ட எண்ணெய்ப் போல தனித்தே நிற்கிறது.

எமது கலாசாரப் பண்பாடு அதனைச் சங்கிலி போட்டுப் பின்னுகிறது.

எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது

என் சின்னவயதில் எங்கள் ஞாபகத்தில் பெண்கள் குறைவு. அதனால் ஒரு பெண்ணை ஒரு வாலிபன் கல்யாணம் செய்தால் ஆயிரம் பணம் கொடுக்க வேண்டும் என் முதல் சகோதரி திருமணத்தின் போது பெண்ணின் விலை மிக அதிகம்!

இரண்டாவது சகோதரிக்கு திருமணம் நடந்த போது அது குறைந்தது

அது மேலும் குறைந்து ஐந்தாவது சகோதரியின் திருமணத்தின்போது மாப்பிள்ளைக்கு நாங்கள் பணம் கொடுக்க வேண்டி வந்தது

இப்பொழுது பெண்ணைப் பெற்றவர்கள் நடுங்குகின்றார்கள்.

சுவாமி விவேகானந்தர் சொன்னது போல் பெண் பிறந்து விட்டால் தாய் தகப்பனின் தலை கழல்கிறது. அந்தப் பொருளாதார நோக்கத்திலேயே பெண்பிறப்பு வெறுக்கப்படுகிறது

ஆண் குழந்தை அடிமடையனாக இருந்தாலும் அவனுக்கு நல்ல விலை கிடைக்கிறது.

அதனாலேயே ஆண் பிறப்பு வரவேற்கப்படுகிறது.

[illegible] நாம் பெண்ணை வெறுக்க நேர்வது எவ்வளவு துரதிஷ்டம்!

வரதட்சணை முறையைப் பற்றி எவ்வளவோ பேர் எத்தனையோ சொல்லி விட்டார்கள். ஆனால் அந்தக் கொடுமை இன்னும் நீடித்துக் கொண்டே இருக்கிறது.

பெண் பார்க்கும் படலம் பேன்பார்க்கும் குரங்காகின்றது

பெண்மையின் எதிர்காலம் முழுவதுமே பணத்தில் அடங்கியிருக்கின்றது

அதன் மென்மை உணரப்படவில்லை

உத்தமமான ஏழைப் பெண்மையில் தெய்வீகம் காட்சியளிக்கவில்லை.

கழுத்திலே ஒரு தாலியைக் கட்ட பெற்றோரைக் கெஞ்சிப்பிழிய வேண்டியுள்ளது.

எமது துயரங்களில் எல்லாம் பெரிய துயரம் இந்தத் துயரமே!

சீதை ராமனை மணந்ததும், ருக்மணியை கிருஷ்ணன் மணந்ததும் — சீர்வரிசைகளுக்காக அல்ல.

ஆம்! நான் வரதட்சணை வாங்காதவன் என்பதே ஒரு வீரமுள்ள தன்மானமுள்ள இளைஞனின் பெருமதிமிக்க சொத்தாக அமைய வேண்டும். ✶

கண்ணதாசனின் 'சுகமான சிந்தனை'யிலிருந்து

கடல் கடந்த கடிதம்

ஏற்பது இகழ்ச்சி!

தம்பி,

மூன்றாவது உலக நாடுகள் உலகவங்கி போன்ற நிதி நிறுவனங்களில் தங்கி நிற்கும் அவல நிலையைப்பற்றி எழுதிய கடிதம் கிடைத்தது Aids பெற்ற நாடுகள் இன்று 'Aids' என்ற நோயையும் குவிந்த வட்டிக்குப் பெறுவதை தம்பி நீ அறிவாயா?

'இலவசமாக வருவது தலையிடி எனினும் விரும்பி ஏற்பவர்கள் இலவசையர்கள்!' என நமது புகழ் பாடியவர் யார் தெரியுமா? முன்னாள் பிரதமர் கொத்தலாவலைப் பிரபு

பிறநாட்டு உதவி அவசியம் தான் என்ற கருத்தைப் பாட நூல்களிலும் அரசாங்கப் பிரசாரத்திலும் காண்கிறோம். கொடுக்கும் மேல்நாட்டுப் பொருளாதார நிபுணர்களும் இதை வலியுறுத்துகிறார்கள்! நாம் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டாமா?

அவர்களைப் போல ஆடம்பரமாக வாழ வேண்டும்! அவர்களைப் போல பெருந்தொழில்கள் தொடங்க வேண்டும்! அதற்குப் பிறநாட்டு உதவி வேண்டும்!'— இப்படிச் சிந்திக்கலாமா? விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டாமா?

நாட்டு வளமென்ன? அதற்குப் பொருந்தமான தொழில்கள் என்ன? அளவான - பொருந்தமான - தொழில் நுட்பங்களை இனம் கண்டு - நமது உழைப்பையே மூலதனமாக்க வேண்டாமா? 'நடென்ப நாடா வளத்தான்!' என வள்ளுவர் இடித்துக் கூறிய கருத்தை ஆழமாகச் சிந்தித்துப் பார்!

நெருக்கடி நிலைகள், இயற்கை அழிவுகள் போன்ற நேரத்தில் பிறர் கையைப் பார்ப்பதில் தவறில்லைத் தம்பி! உழைக்கும் சமுதாயம் மேலும் உழைத்திச் சிறு உதவி பெறுவதிலும் தவறில்லை. வெறும் நுகர்வுச் சமுதாயமாகவல்லவோ (Con--sumer Society) மாறியுள்ளோம் நாம்!

ஜப்பானிய, ஜேர்மனியர் உழைப்பால் உயர்ந்த வரலாறுகளைப் படி! உரிமைக்கும் உணவுக்கும் பிறர் கையைப் பார்த்திராதே! நாடாக—வளமான நாடாக—நாம் அமைக்க வேண்டுமாயின் பிறர் உதவியை நாடாமல் தம்பி, நாமே உழைக்க வேண்டும்! தெளிவாகச் சொல்லி விட்டாள் ஔவை— "ஏற்பது இகழ்ச்சி!"

அன்புடன்
— சிவா —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம் - பாடம் பயில்வோம்

க. பொ. த. ப. (சாதாரணம்) மாதிரி வினாக்கள்

01) 3, 4, 5, இனால் வகுபடும்போது 2ஐ மீதியாகத் தரும் மிகச்சிறிய எண் யாது?

02) $(111)^2 = 12321$ எனும் உண்மையைக் கொண்டு $(0\ 111)^2$ என்பதன் பெறுமதி காண்க.

03) சுருக்குக :— $5/14 \div 3/2$ இன் 1 3/7

04) A, B என்பவர்களுக்கிடையில் 1100 ரூபாவை 1/3:2/5 என்ற விகிதத்தில் பங்கிடும் போது A பெறுவது எவ்வளவு?

05) $t^2 + 1/t^2 = 18$ ஆயின் $t-1/t$ இன் பெறுமானம் யாது?



06) இப்படத்தில் காணப்படும் எல்லா ஒத்த கோணச் சோடிகளையும் எழுதுக.

07) $(x-2)(x-3)=0$ ஐ தீர்க்க. இதன் உதவியுடன் 5,— 4 ஐ மூலகங்களாகவுடைய இருபடிச் சமன்பாட்டை எழுதுக.

08) $(0\ 0016)^{0\ 25}$ இன் பெறுமானம் யாது?

09) $a/b=m/n$ எனின் $a+b/b$ $a-b/b$ என்பவற்றை m, n இல் தருக.

10) $1/2\ x^2 y^2 - 1 + 1/2x^2y^2 = 1/2(\ldots\ldots) = 1/2\ (\ldots\ldots)^2$ எனும் இடைவளிகளை நிரப்புக.

11) $x=p+\ m-x$ இல் m ஐ ஏகிய உறுப்புக்களில் காண்க.

12) கிளை பற்றிய அறிவைக் கொண்டு $(x-2\ x+2)(2+x+2\ x$ ஐ எளிய வடிவில் தருக.

13) மட$_2$5=a ஆயின் மட$_2$ 80 ஐ a இன் சார்பில் தருக.

14)



நிழல் படுத்தியிருக்கும் பிரதேசத்தை தொடை மொழியில் தருக

15) ஒரு தொட்டியை குழாயொன்று 1 மணித்தியாலத்திலும் வேறோர் குழாயொன்று அதே தொட்டியை 3 மணித்தியாலத்திலும் நிரப்புமாயின் இரண்டும் சேர்ந்து இத்தொட்டியை எவ்வளவு நேரத்தில் நிரப்பும்?

16) ஒரு ரூபாவுக்கு ஒரு மாத வட்டி பத்து சதமெனின் வட்டி வீதம் யாது?

17 1, 2, 3, 4, 5, 6 என்ற எண்களையுடைய ஒரே மாதிரியான கடதாசித் துண்டுகள் உள்ள பையிலிருந்து இரண்டு துண்டுகள் ஒரே தடவையில் எழுமாறாக எடுக்கப்படுகையில் பெறுபேறுகளின் மாதிரி வெளியை நெக்காட்டு தனமொன்றிலேகுறித்துக் காட்டுக.

18. ஒரு கூட்டலின் விருத்தியில் எட்டாம் உறுப்பு k ஆக, இத்தொடரின் பதினைந்து உறுப்புக்களின் கூட்டுத்தொகை காண்க.

19) என்னதொகைப் பணத்தை 90 ரூ. ஆகவுள்ள 10 சதவீத சரக்கு முதலில் முதலிட்டால் இலாபம் 200 ரூபா ஆகும்?

20) $x>1$ ஆக x, (x+2), (x+3) என்பவை ஒரு செங்கோண முக்கோணியின் பக்கங்களாயின் செம்பக்கத்தின் நீளம் யாது?

21) ஒரு குறித்த மோட்டார் சைக்கிளோட்டும் நபரொன்றின் ஒரு வாரத்திற்கான பெற்றோல் செலவினத்தின் இடைப் பெறுமானம் 1 2 இலிற்றர் ஆகும். அந்நபரிலை வாரத்தின் முதல் ஆறு நாட்களிலும் செலவழிக்கப்பட்ட பெற்றோலின் அளவு 7 65 இலீ ஆயின் அவ்வார இறுதி நாளில் அவரால் பாவிக்கப்பட்ட பெற்றோலின் அளவு யாது

22) சதுரமொன்றின் பரப்பு $4x^2-4xy+y$ ஆயின் அதன் சுற்றளவைக் காண்க?

23)



இப்படத்தில் DE=DC உம் BCD=EAB ஆகும். EAB=100° ஆயின் CDE இன் அளவு யாது?

24) தான் A = a ஆயின் சைன் (90–A) ஐ a இன் உறுப்பில் தருக.

25)



ABCD ABEF என்பன இணைகரங்களாகும் நாற்பக்கல் DCEF ஓர் இணைகரம் ஏன்?

26)



படத்தில் தரப்பட்டுள்ள ABCD ஓர் செவ்வகமாகும் AO=OC, AB=10 சமீ BC=5சமீ ஆயின் AEFD இன் பரப்பைக் காண்க.

27) $2y=3x+4$ எனும் கோட்டிற்கு சமாந்தரமாக உள்ளதும் (0, 3) என்ற புள்ளியினூடு செல்வதுமான கோட்டின் சமன்பாட்டைக் காண்க.

28)



படத்தில் தரப்பட்டுள்ள வெவ்வேறு ஆரைகளையுடைய வட்டங்களில் முக்கோணிகள் அமைக்கப்பட்டுள்ளன அம் முக்கோணிகளிலுள்ள இன்னுமோர் அகக்கோணம் எவ்வளவு?

29)



முக்கோணி ABC இல் AB=c, AC=b முக்கோணி ABC இன் பரப்பை பக்கங்கள் b, c இலும் கோணம் A இலும் தருக.

(கணிதம்)

திரு. நடராசா, திரு. கிருஷ்ணகுமார்

30)



படத்தில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கான தின் மத்தின் அளவுகள் செ.மீ இல் தரப்பட்டுள்ளன இதன் மேற்பரப்பைக் காண்க.

சென்றவாரம் வெளிவந்த நமிழ்ப்பாட வினாக்களுக்கு உரிய விடைகள் அடுத்த வார சஞ்சீவியில் பிரசுரிக்கப்படும்.

பண்டிதமணி வரலாறும்---

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மணிகளும் தோன்றியிருக்கும் நிலையிலும், பண்டிதர் என்ற தனிப் பெயர் பொதுவாகவும் சிறப்பாகவும் கணபதிப் பிள்ளை அவர்களையே குறிக்கும் என்பதை ஈழநாட்டில் தமிழ் அறிந்தோர் யாவரும் ஒப்புக் கொள்வர். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த ஒருவரின் பண்புகளை அளவிடுவதற்கு யான் தகுதியுடையவன் அல்லன் என்பதையும் ஈண்டுக்கூறவிரும்புகின்றேன்.

ஆசிரிய கலாசாலையில் இலக்கியம், பாஷை என்னும் பாடங்களை மாணவர்கள் மாதிரிப் பாடங்களாகத் தெரிந்து கொண்டால், பண்டிதர் அவர்கள் மதிப்புரை கூறுவது மிகச் சிறப்பாகவும் விருந்து போல் சுவைக்கத் தக்கதாகவும் ஒருங்கும் அவ்வித சிறப்பையும் இரசனையையும் பண்டிதர் அவர்கள் மேற்பார்வை செய்து மதிப்புரை கூறும் ஒவ்வொரு பாடத்திலும் எதிர்பார்க்கலாம். குறைந்தகுறைகளை எடுத்துக் காட்டுவதிலும் அழகும் சிறப்பும் தோன்றும் எந்த மாணவரும் அதை நியப்படாமல் உற்சாகமடையக் கூடியதாகவே பண்டிதர் அவர்களின் குறிப்புரைகள் விளங்கும்.

அவர்களுடைய குறிப்புரைகளைக் கேட்டு கேட்டு யானே இலக்கியங்களைச் சுவைக்கக் கற்றுக் கொண்டேன். இலக்கண இலக்கியங்களை எவ்வித அலுப்புமின்றிச் சோர்வடையாது இலேசாக அவர்களிடம் கற்கலாம் என்பதை எத்தனையோ மாணவர்களும் பாலபண்டிதர்களும் எனக்குச் சொல்லியுள்ளார்கள். பண்டிதர் அவர்களுடைய சுவாசத்தால் யானுமே அநேக அணிகளையும் இலக்கிய நயங்களையும் கல்லாமல் கற்றுக் கொண்டேன்.

பண்டிதர் அவர்கள் இலக்கியங்களுக்கு நயங்காண்பதில் இயல்பாகவே சுயவிவேகத்தை உபயோகித்து ஏகியோர் அதிசயிக்கத்தக்க ஆழ்ந்த கருத்துக்களை எடுத்துக் காட்டும் இயல்பினர் என்பதை நான் எத்தனையோ சந்தர்ப்பங்களில் கண்டுள்ளேன்.

கவிஞருக்கே அதிசயம்

மகா கவிஞர் யாவரும் ஒருவித இயற்கை வரங் கொண்டே கவிபாடுவர் என்ற கொள்கை இங்கும் மேலைத் தேயங்களிலும் இருந்து வருகின்றது. ஆனால் சில சமயங்களில் அவர்களுக்குத் தங்கள் கவிகளிற் பொதிந்து கிடக்கும் அற்புதக் கருத்துக்கள் நயங்கள் தோன்றுமுற் போகலாம் அப்படியான அரிய நயங்களைப் பண்டிதர் அவர்களைப் போன்ற அதிவிவேகிகள் எடுத்துக் கூறக் கவிஞர்களே ஆச்சரியப்படுவார்கள். அதனாலேயே சிறந்த இலக்கியங்களுக்குப் பலப்பல வியாக்கியானங்களும் விசேடஉரைகளும் எழுந்தன பண்டிதர் அவர்கள் இவ்விதம் புதுப் புதுக் கருத்துக்களைக் கண்டறிவதில் மிக்க ஆற்றலும் சாமர்த்தியமும் படைத்தவர்கள். அப்பண்புகளைச் சாதாரண ஆசிரியர்களோ பண்டிதர்களோ அறியார்கள். தமிழ் மொழியைப் பயன்படுத்தவும் வழிகண்டிலர்.

— (வளரும்)

நிழலும் நிஜமும்--

(5ஆம் பக்க தொடர்ச்சி)

போகிறது என்று மனதின் ஒரு பக்கத்தில் ஆறுதல் பிறந்தாலும், ஏதோ ஒன்றைப் பறிகொடுத்து விட்டது போன்றதொரு உணர்வும் ஏன்தோன்ற வேண்டும்? இயல்பாகவே திருமணப் பேச்சைக் கேட்டு ஒரு கன்னிப் பெண்ணுக்கு மனதில் ஏற்படக்கூடிய சந்தோஷ உணர்வு ஏன் என் மனதில் அப்போது ஏற்படவில்லை. தானல் நீரை அருந்த ஓடிக் களைத்த மானைப் போன்று நானும் இந்தச் ஸ்ரீதரன் மாஸ்டரைப் பற்றி என் மனதில் ஆசைத் தளிர்களை துளிர்க்க விட்டேனே?

இருந்தபோதும் மனதில் ஒரு மூலையில் எழுந்த எண்ணம் நீதான் தவறு செய்து விட்டாய்? இப்படி ஒரு ஆசை மனதில் எழுந்தபோதும் இவ்வளவு காலமும் தாழ்திறந்து உன் பிழையல்லவா? என்று எண்ணியே குற்றம் சாட்டத் தவிப்பட்டது

அப்பாவின் நிலையை நினைக்க மனதை ஏதோ குற்ற உணர்வு ஆக்கிரமித்து அவர் எத்தனையோ கஷ்டப்பட்டு இந்த இடத்தை ஒழுங்கு செய்து கொண்டு வந்திருக்கிறார். கன்னிப் பெண்ணை வீட்டில் வைத்துக் கொண்டு கரை ஏறுற வழி தெரியாமல் திண்டாடுகிறோமே என்று அம்மா வாய்க் கொருதரம் புலம்புவதை மௌனமாகக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த அப்பா, இவ்வளவு நாட்களுக்குப் பிறகு ஏதோ ஒரு மாதிரி இந்தப் பெண் பார்க்கும் ஒழுங்கைச் செய்து கொண்டு வந்திருக்கிறார் என்றால் அவர் எவ்வளவோ பொறுப்புக்களைத் தலையில் ஏற்கத் தயாராகித்தான் இந்த இடத்துக்கு வந்திருக்கிறார் என்பதை நினைக்க மனதை ஏதோ செய்கிறது.

எல்லாவற்றையும் சிந்தித்து அலசி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டிய நிலையில் நான் அறுந்திருந்தேன் அப்பாவும் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு கடைசி முறையாக ஒரு நடவை ஸ்ரீதரன் மாஸ்டரைத் [illegible] பெண் பார்க்க [illegible] வைத்தார்.

மாஸ்டரின் மௌனம் கண்டு [illegible] கலாம். அதற்குக் கூட விதி எப்படியெல்லாம் விளையாட்டுக் காட்டுகிறது லீலில் ஊருக்குப் போய் விட்டாராமே!...

அன்றிரவு முழுவதும் நித்திரையின்றி படுக்கையில் உழன்று சிந்தித்த நான் கடைசியில் கண்ட முடிவு இந்தச் ஸ்ரீதரன் மாஸ்டரின் நினைவை என் மனதை விட்டு அகற்றி தூர எறிந்து விடுவது என்பதுதான்.

சின்ன வயதிலிருந்தே கஷ்ட நிலையில் வளர்ந்து பழகி விட்ட எனக்கு, அம்மா, அப்பாவின் கஷ்டங்களை உணர்ந்த என்னால் என் மனதில் முளைத்துத் துளிர் விட்ட அந்த மாஸ்டரின் நினைவைக் கருக்கிக் கொன்றாவது கவிவளவொன்றும் கஷ்டமாகத் தெரியவில்லை மாஸ்டரின் நினைவை ஒரு கெட்ட கனவாக ஒதுக்கி விட்டேன்.

பிறகுதான் எல்லாம் கிடுகிடுவென்று நடந்து முடிந்து விட்டனவே. என 'அவர்' என்னைப் பெண் பார்க்க வந்ததும், அடுத்து திருமணம் நடந்ததும் கனவுக் காட்சிகள்போல மனதிரையில் ஓடி மறைகின்றன

நாலரை வருடங்களாக நான் வாழ்ந்த வாழ்வின் பயனாய் என் கண்ணனைத் தந்து, என் அவரைக் கவர்ந்து கொண்டு என்னைத் தனி மரமாக்கி விதவை என்ற பட்டப் பெயரையும் சூட்டி விதி சோர தாண்டவம் ஆடி ஓய்ந்து இருக்கிற இந்த நேரத்தில் அந்தச் ஸ்ரீதரன் மாஸ்டர் வந்திருக்கிறார்.

அப்பாவும் அவரும் முன்னறையில் பேசிக் கொள்வது காதில் விழுகிறது. என் வாழ்வில் நேர்ந்து விட்ட பேரிடிக்காக அவர் மனம் வருந்துகிறார். அத்தோடு வேதாந்தம் பேசி அப்பாவைச் சமாதானப்படுத்த முயல்கிறார்

ஆனால் நான்...

கண்களில் பெருகும் கண்ணீரைத் தடைத்து விட ஒருவருமற்ற நான் என்னுள் குமுறிக் குமுறி அழுகிறேன் அப்பா தன் உள்ளக் குமுறல்களை [illegible] தீர்த்து [illegible] விட்டார் [illegible] கொண்டிருக்கிறது. பேச்சையே காணோம்.

எல்லாம் நிழலாடுவதை உணர்ந்து நிமிர்கிறேன் எதிரே அவர். ஸ்ரீதரன் மாஸ்டர்..... பொங்கி வரும் கண்ணீருக்கு எவ்வளவு முயன்றும் அணைபோட முடியவில்லை.

விம்மி, விம்மி அழுகிறேன். அவர் கொஞ்ச நேரம் மௌனமாகவே நிற்கிறார். நான் என் துயரத்துக்கு அழுது முடிய அவகாசம் தருகிறார் போலும் என் துயரையும் ஒருவாறு ஒப்கிறது

சாந்தி! நடந்ததென்னமோ நடந்து விட்டது நீயோ நானோ அழுவதால் என்ன பயன் கிடைத்து விடப் போகிறது?... மனதைத் தேற்றிக்கொள்''

கிணற்றுக்குள்விருந்து வரும் குரல்போல ஒலிக்கிறது. அவரது வார்த்தைகள். கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன ஆறுதல் வார்த்தைகள் தானென்றாலும், உண்மையாக வருந்துகிற ஒரு இதயத்தின் குரலாக ஒலிப்பதாக ஒரு உணர்வு தோன்றுகிறது.

மாஸ்டர்!... எனக்குப் பைத்தியமே பிடித்து விடும்போல இருக்கிறது. அவர் போன பின் நான் மட்டும் வாழ்ந்து என்ன பயன்?...

என் குரல் உடைந்து ஒலிக்கிறது

சாந்தி... மனதை அலையவிடாதே!... உன் மகனை அனாதையாக்க நினைக்காதே! அவனை வளர்த்து ஆளாக்கவேண்டியது உன் பொறுப்பிலையா?.....

மகன்... மகன்... என் கண்ணனை நினைக்க மனது ஒரு நிலைப்படுகிறது ...

(வளரும்)

இரண்டாவது----

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இழந்து விட்டார். இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாமே? என்று நண்பர் கேட்டார். பையன் (அவரது மகன்) சம்மதிக்கமாட்டானே என்கிறார்

பையன் சம்மதிச்சா பண்ணிக் கொள்ளுவார் போலிருக்கு!

ஒரு யூதன் ஒரு டாலர் போட்டு ஒரு லாட்டரிச் சீட்டு வாங்கினான். இன்னொரு சீட்டும் மற்றொரு டாடலர் கொடுத்து வாங்கினான். ஒரு சீட்டுக்கு 8கோடி பரிசு வந்தது. ஓ என்று அழுதானாம். மனைவி ஏன் என்று கேட்டாள். ஒரு டாலர் வீணாகிப் போய்விட்டதே என்றானாம்.

வந்ததற்குச் சந்தோஷப்படாமல் வராததற்கு ஏன் அழுவான்?

ஒருவர் நன்கு தூங்கிக் கொண்டிருந்தார் கண் முடிய வண்ணமாகவே அருகில் படுத்திருந்த ஒருவர் முதுகில் ஓங்கிப் பலமுறை குத்தினார். அவர் எழும்பி இவரை எழுப்பி ஏன் என் முதுகில் இப்படிக் குத்தினாய் என்று கேட்டார்

அவர் பாவம்! வருத்தத்துடன், தான் தபாலாபீசில் தேதி முத்திரை குத்திய பழக்கத்தால் கனவில் அது போல் கண்டு உம்மைக் குத்தி விட்டேன். மன்னித்துக் கொள்ளும் என்றானாம்

வாரியாரால் முன்னுக்கு வந்தோர் பலர். ஏழைகளுக்கு உதவி வாழ்வாங்கு வாழ்பவர் பலர். பயன் பெற்ற புலவர் பலர் அவரது பேச்சால் கவரப்பட்டு ஈயக்கற்றுக் கொண்டோர் பலர். ஏழை மாணவர் பயனடைய நிரந்தர உதவிக்கு ஏற்பாடு செய்து படிக்கும் மாணவர் பலர்.

இரண்டாவது அருணகிரிநாதரகக - அறுபத்து நாலாவது நாயனாராக விளங்கும் இப்பெரியார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக வாழ்ந்து, தமிழுக்கும் சமயத்துக்கும் தொண்டு செய்து விளங்க வேண்டும் ★

தமிழர் எதிர்ப்பு---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

''பூமி புத்திரா'' என்ற பெருநூல் 1986ஜூலையில் உபசலா பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது அதன் கருவூலப் பிரதிகள் இருகட்டுரைகளாக வெளிவந்தன. ஜேர்மன் மொழியிலும் பிரசுரம் செய்துள்ளேன்' என்றார் பேராசிரியர் பீற்றர் ஷால்க்

புலிச் சின்னம் எதற்காக?

விடுதலைப் புலிகள் என்ற பெயரும் புலிச் சின்னமும் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டன என அவர் வினவினார். சோழர் புலிக்கொடி உடையவர்கள் சோழப் பேரரசு இமயமலை முதல் கடாரம் வரைபரந்திருந்தது என்ற பழம் பெருமையை நினைவூட்டவே இத்தேர்வு என்றேன்

''அதைச் சுட்டிக்காட்டித்தான் தென் இலங்கைச் சிங்கள இனவெறி ஸ்தாபனங்கள் சோழர் அநுராதபுர நாகரீகத்தை அழித்ததை ஆத்திரத்துடன் விளக்குகின்றன. இப்பொழுது தனி நாடேவ, அதற்கு வழி கோலும் மாநில சுயாட்சியோ வழங்கினால் பழைய வரலாறு மீண்டும் புதுப்பிக்கப்படும்

சிங்கள பௌத்த இனம் அழியும் எனப் புலம்புகின்றன '— என்றார் ஷால்க்

ஈழவின் இரத்தினம் நிலைத்திலும், யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நிகழ்ந்த கருத்தரங்குகளில் தமது ஆய்வுகளைச் சுட்டி உரையாற்றியதுடன், தமிழரது பிரச்சினைகளை அனுதாபத்துடன் அணுகி இயன்றளவு விபரங்களைத் திரட்டித் தமக்கு இக்குள்ள நிலையைப் புலப்படுத்தும்படியும் கட்டளையிட்ட உதவிவழங்கும் நிறுவனத்துக்கு உண்மை நிலையை உணர்த்துவதாக வாக்களித்தார்.

1970ல் தாம் யாழ்ப்பாணம் வந்தபோது நல்லூர்க் கோவிலில் நிலத்தில் அமர்ந்திருந்து சமயக் கிரியைகளை அவதானிக்க உதவிய தமது பௌரு நண்பர் பகவதி பொன்னுத்துரையைச் சந்தித்து நன்றி கூறவும் அவர் மறக்கவில்லை.

அவரது மனைவி சர்வதேசமன் விப்புச்சபைப் பணிமனையில் ஈடுபட்டுள்ளார். யாழ் மனித உரிமைச்சபை, அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் ஆகியவற்றின் பணிகளையும் பேராசிரிய 'ஷார்க்' அவதானித்தார் மானிட நேயப் பணிகள் சிலவற்றையும் அவர் பொறுப்பேற்றார். ★

காலத்தால் அழியாத--

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தார்கள் என்று அறிகின்றோம்.

இவ்வாறு பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்கள் உலக சக்கரவர்த்திகள் உலக அரசாங்கம் என்று இப்படி எல்லாம் எண்ணி வந்தார்கள் என்று தெரிகிறது

இதற்கு நெடுங்காலத்திற்குப் பிறகு தேசியமும் ஒரு புதுமைதமான ஏகாதிபத்தியக் கொள்கையும் தோன்றின.

அவைகளால் உலகில் வேண்டிய அனர்த்தங்கள் விளைந்திருக்கின்றன. மறுபடியும் ஓர் உலக அரசாங்கம் ஏற்படுத்தப் படவேண்டுமென்று பேசப்பட்டு வருகிறது.

உலக அரசாங்கம் என்றால் ஒரு பெரிய சாம்ராஜ்யம் உலகம் முழுவதையும் ஆளும் ஒரு ஏக சக்கரவர்த்தி என்றெல்லாம் அல்ல.

ஒரு விதமான உலக குடியரசை ஸ்தாபிக்க வேண்டும். இப்புதிய ஏற்பாட்டின்படி ஒருதேசம் மற்றொரு தேசத்தையும், ஒரு இனம் மற்றொரு இனத்தையும் ஒரு வகுப்பு மற்றொரு வகுப்பையும் சுரண்டிப் பிழைக்கும் கேவலமான வாழ்க்கை ஒழிய வேண்டும்

இந்நோக்கம் சமீபத்தில் நிறைவேறுமா, நிறைவேறாதா? என்று சொல்வது கடினம் ஆனால் இவ்வுலகத்தின் இன்னல்களுக்கும் நோய்களுக்கும் வேறு மாற்றோ, மருந்தோ இருப்பதாகத் தெரியவில்லை

(தொடரும்)

காடு சுடுகின்றது--

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தல் செய்கிறான்

வீதி வழியிலும், கடல் துறையிலும், போர்க்களத்திலும் வெல்லப் பறங்கியரை வெற்றி வாகை சூடிய வேந்தனின் படை ஏறு நடை போட்ட வண்ணம் பண்ணைக்காட்டை நெருங்குகிறது நல்லூர் சேனையின் இசையணியினரின் போர்முழக்கம் மன்னர் கோட்டை வாயிலில் நின்ற பறங்கியரின் செவிப்புலனை எட்டியதும் அவர்கள் காட்டை நோக்கி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்க்கின்றனர்.

அப்போது மன்னனின் பக்கம் திரும்பிய தளபதி 'மன்னா காடு கடுகிறது' என்று கூற அதற்கு மன்னன் 'ஆம் இப்போது இது சுடும் காடு இனி கடுகாடு' என்று சொல்கிறான் மன்னனின் கூற்றைக் கேட்டு வீர மாணிக்கதேவனும் பராந்தகனும் மனதுள் சிரிக்கின்றனர்.

பண்ணைக்காட்டை அடைந்த நல்லூர் சேனையினர் தளபதி வீர மாணிக்கதேவனின் கட்டளைக்கிணங்க குதிரைகளை மரங்களில் கட்டி விட்டு மெதுமெதுவாக மன்னர்கோட்டை நோக்கி முன்னேறுகின்றனர்.

மன்னனின் வெண் குதிரை மெல்ல மெல்ல அடிமேடுத்து வைத்துச் செல்கிறது

(வளரும்)

விதிகளை----

(3ஆம் பக்க தொடர்ச்சி)

லுக்கும் ஜீவனுக்கும் உள்ள இணைப்பு இறுகி ஈஸ்வரனின் அன்பும் அருளும் என்றும் நிலைத்திட துய உள்ளத்துடன் தொண்டாற்ற வேண்டும்' எனப் பகவான் பாபா பகர்ந்துள்ளார். ★

பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
இந்திரா
ஜோன்தாசன்

மறைவு:
22 - 11 : 1976

பிரதானவீதி,
மன்னார்.

துயருடன் நினைவறும்,
கணவன், பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான சஞ்சீவி

காயத்ரீ மந்திரம்

'ஓம் பூர் புவஸ்ஸுவ
ஓம் தத் சவிதுர்
வரேண்யம்,
பர்கோ தேவஸ்ய
தீமஹி
தியோ யோந
ப்ரசோதயாத்'

இது சூர்ய காயத்ரீ மந்திரம். இதன் தமிழாக்கம், 'யார் நம் ஆத்மீக அறிவை தூண்டுகிறாரோ அந்தச் சுடர் கடவுளின் பிரகாசமான ஒளியை தியானிப்போமாக', என்பதாகும்

மந்திரங்களுக்கெல்லாம் மூலமந்திரமாக இருப்பது 'ஓம்' என்னும் ஓங்காரம் அதை உச்சரித்த பிறகே மந்திரங்களை உச்சரிப்பது ஐதீகம்

பூ, புவ, ஸுவ என்னும் சொற்கள் மகாவியகிருதிகள் எனப்படும். மகாவியகிருதிகள் 'ரபஞ்சத்தின் ஏழு படிநிலைகளை அல்லது உலகங்களை குறிக்கும் இவைகளில் கீழ் மூன்று உலகங்களாகிய பூலோகம் (பிருத்வி), புவர்லோகம். (அந்தரிக்ஷம் அல்லது சூக்ஷும உலகம்) ஸ்வர்க்கம், (மனோ உலகம்) ஆகியவைகளே இங்கு குறிப்பிடப்படுகின்றன.

இந்த மூன்று உலகங்களும் நனவு நிலை (ஜாக்ரதாவஸ்தை) கனவு நிலை (சாப்பனாவஸ்தை) கனவற்ற உறக்க நிலை (சுஷுப்தி) ஆகிய மூன்று நிலைகளையும் குறிக்கும்

மனிதர்கள் இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் உட்பட்டவர்களாக மூன்று உலகங்களிலும் மாறி மாறி சஞ்சரித்துக் கொண்டிருப்பவர்கள்

இந்த மூன்று நிலைகளில் எந்த நிலையில் இருந்தாலும் காயத்ரீ மந்திரத்தினுடைய சக்தி எமக்கு ஆத்மீக முன்னேற்றத்தை அளிக்க வேண்டும் என்பதே இச்சொற்களின் பொருள்.

சூரியன் சுயமாகவே பிரகாசம் வாய்ந்தது. சூரியனிடமிருந்து பிரிந்து சிதறிய பூமியும் சந்திரனும் சுயமான பிரகாசம் அற்றவைகள் பரப்பிரம்மம் எப்போதும் பிரகாசமாயிருக்கும் பேரொளி. இப்பேரொளியின் பிரகாசம் சூரியன் வாயிலாக எமக்குத் தென்படுகிறது. எம்மை வந்தடைகிறது.

பரப்பிரம்மத்தின் அம்சமாகிய சூரிய தேவதை எமக்குத் தென்படுகின்றதாகவும் தென்படாததாகவும் வானத்தில் இலங்குகின்றது எமக்குத் தென்படுகின்ற அம்சத்தை சூரியன் என்கிறோம் அதன் கட்புலனாகாத நிலை 'ஸவிது' என அழைக்கப்படுகிறது.

எமக்குத் தென்படுகின்ற சூரியனை விஞ்ஞானம் ஒரு பிரமாண்டமான அக்னிப் பிழம்பு என்று விளக்கிகின்றது நீரஜன் (Hydrogen) பக்தியம் (Helium) ஆக மாறுவதால் உற்பவிக்கும் மகத்தான இயக்க சக்தியே சூரிய சக்தியாகப் பரிணமிக்கிறது என்று விஞ்ஞானம் விளம்புகிறது

சூரியனில் இருந்து வெளிப்படும் அதிர்வுகளும் சக்திகளுமே இவ்வுலகில் சீவராசிகள் உயிர் வாழ்வதற்கு ஆதாரமாகவுள்ளன.

கதிரவனின் ஆத்மீகத் தோற்றம் விஞ்ஞான ஆய்வுகளுக்கு அப்பாற்பட்டது.

சூரியனில் மறைந்திருக்கும் ஆத்மீக ஒளி ஒவ்வொரு உயிரின் இருதயத்திலும்புலன் உணர்வாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்று 'யாஜ்ஞவல்க்ய சம்ஹிதாவு' எடுத்துரைக்கின்றது

ஈசா வாஸ்யோ நிடத்தில் சூரியனை நோக்கி இவ்வாறு பிரார்த்திக்கப்படுகிறது:

'தேவனே!
இவ்வுலகத்திலுள்ள
சகலதுக்கும்
ஆதாரமாக இருக்கும்
நீ, உனது மெய்
ரூபத்தை மறைத்து
நிற்கும் பிரகாசமான
ஒளி வட்டத்தை
நீக்கி, சத்தியவானாகிய
எனக்குக் காட்சி
தந்தருள்வாயாக'

பிரபஞ்சத்துக்கும் ஜீவகோடிகளுக்கும் ஆதாரமாகவும், மூலப் பொருளாகவும், முதல் காரணமாகவும், இருப்பது பரப்பொருள். ஜகத்துக்கு

அ. குமரகுரு

ஜீவராசிகளுக்கும் தூண்டுதல் அளிக்கும் பாங்கில் இருக்கிற பரப்பொருள் சவிது என்று சொல்லப்படுகிறது கட்புலனாகின்ற சூரியன் இச் செயலைப் பிரபஞ்ச நிலையில் செய்து வருவதால் சூரியனும் 'சவிது' என்று அழைக்கப்படுகிறது.

நாம் செய்யும் காரியங்களுக்கெல்லாம் தூண்டுதல்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. தூண்டுதல்கள் இன்றி எதுவும் நடைபெறுவதில்லை. தூண்டுதல்களால் ஏவப் பெற்று நாம் அறிவை வளர்த்து வருகிறோம்.

சூரிய சக்தியானது இச்சூர்ய மண்டலத்திலுள்ள ஜீவராசிகளின் பரிணாம வளர்ச்சிக்குத் தூண்டுதலாக இருப்பதோடு மனிதனின் ஆத்மீக அறிவைத் தூண்டுவதாகவும் அமைந்திருப்பது பரப்பிரம்மனின் செயற்பாடு அம்சங்களில் ஒன்றே.

சூரியன் அசையாது நிற்கிறது அதைச் சார்ந்து சுற்றிக் கொண்டும் சுழன்று கொண்டும் இருக்கும் கிரஹங்களும் அசைந்து கொண்டும் தோற்றத்திரிபு பெற்றுக் கொண்டும் இருக்கும் பொருள்களும் சூரியன் அசையாதிருக்கும் சூரியன் ஆதாரவாயிருக்கின்றது.

ஜீவகோடிகள் அனைத்தினுடைய உள்ளங்களிலும் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் பேரொளி ஒரே பாங்கில் வீற்றிருக்கின்றது. அந்தந்த ஜீவனுடைய பரிணாமத்துக்கு ஏற்றவாறு அறிவை அந்தப் பேரொளி தூண்டுகிறது

எனவே கட்புலனாகாத பரப்பிரம்மத்தை இறைஞ்சுவதற்கு ஒரு பாகக் கட்புலனாகின்ற சூரியனை காயத்ரீ மந்திரத்தைச் செபித்து இறைஞ்சுவோமாக.

உடற்பயிற்சி உடலை உறுதிபடுத்துவதுபோல கல்வி மனதைப் பக்குவப்படுத்துவது போல காயத்ரீ மனிதனுடைய ஆத்ம சொரூபத்தை உயர்த்தவல்லது.

நெற்பயிர்ச் செய்கை

வளர்ச்சிப் பருவங்களும் உரப்பசளைப் பயன்பாடும்

நாம் நெற் செய்கையில் பல வர்க்க நெல் இனங்களைப் பயிரிடுகின்றோம். இந்த நெல் இனங்கள் இவற்றின் வயதினைக் கொண்டு பின்வரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. 3 மாத இனம்
2. 3½ மாத இனம்
3. 4–4½ மாத இனம்
4. 5 மாத இனம்

இவை தவிர புதிய திருந்திய இனங்கள், பழைய திருந்திய இனங்கள், உள்ளூர் இனங்கள் எனவும் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் புதிய திருந்திய இனங்கள் கூடிய பசளை இடும்போது கூடிய விளைச்சலைக் கொடுக்கக் கூடிய பச

பகுதி ஒன்று

ளைத் தூண்டற்பேறு உடையனவாகவும், பழைய திருந்திய இனங்களும் உள்ளூர் இனங்களும் ஓரளவு பசளைத் தூண்டற் பேறை மட்டும் உடையனவாக இருப்பதால், இப் புதிய திருந்திய இனங்களுக்கும் பழைய திருந்தியற்றும் உள்ளூர் இனங்களுக்கும் சிபார்சு செய்யப்படும் பசளையின் அளவும் பாவிக்கும் காலமும் வேறுபடுகின்றன.

இனி நெல் இனங்களின் வளர்ச்சிப் பருவங்

வி. செல்வநாயகம்

களைக் கொண்டு இவற்றின் வளர்ச்சிக் காலம் மூன்று முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

பதிய வளர்ச்சிப் பருவம்

இப்பருவமானது பயிர் முளைத்ததிலிருந்து கடைசி மட்டம் பெயரும் வரையுள்ள காலப் பகுதியாகும். இப்பருவமானது நெற் பயிரின் வயதுக்கு ஏற்றவாறு நாட்களில் வேறுபடுகின்றது. ஒரு மூன்று மாத நெல் இனத்துக்கு ஏறக்குறைய 30 நாட்களாக இருக்கும் பதிய வளர்ச்சிப் பருவம் 3½ மாத இன நெல்லுக்கு ஏறக்குறைய 45 நாட்களாகவும் 4 மாத நெல் இனத்துக்கு ஏறக்குறைய 60 நாட்களாகவும் 5 மாத நெல் இனத்துக்கு 90 நாட்களாகவும் காணப்படுகின்றன. எனவே இவ்வயது நாட்களை அடிப்படையாகவும் கொண்டு புதிய வளர்ச்சிப் பருவக் கால பசளை இடப்படல் வேண்டும்.

இப்பருவத்திலேயே மட்டம் பெயர்தல் போன்ற முக்கிய தொழிற்பாடுகளும்நடைபெறுகின்றது.

இனப் பெருக்க வளர்ச்சிப் பருவம்

இப்பருவமானது பூமுனை அருப்பு (குஞ்சமுனை) ஆரம்பித்த காலம் தொடக்கம் குடலைப் பருவமடைந்து கதிர்க்கும் வரையுள்ள காலப் பகுதியாகும். இப்பருவமானது எல்லா வயது குனங்களுக்கும் ஏறக்இறைய 25–30 நாட்களாகும்.

முதிர்ச்சிப் பருவம்

இப்பருவமானது நெற் பயிர் கதிர் கக்கியதிலிருந்து 85 % மணிகள் முற்றி முதிர்ச்சியடைந்து அறுவடைக்கு தயாராவது வரையுள்ள காலப் பகுதியாகும். இப்பருவமும் எல்லா வயது இனங்களுக்கும் ஏறக்குறைய 25–30 நாட்களேயாகும்.

நெற்பயிரின் இந்த வளர்ச்சிப் பருவங்களைக் கொண்டு இப்பயிரின் பசளைத் தேவையும் முக்கியமாகக் கணிக்கப்படுகின்றது. நெற்பயிரின் வளர்ச்சிப் பருவங்களையும், அப்பருவங்களில் பசளையிடுவதனால் பயிருக்கு ஏற்படுகின்ற நன்மைகளையும் நாம்அறிந்து கொண்டால்தான் நெற் பயிருக்கு தேவையான நேரங்களில் பசளையிடல் இலகுவாக இருக்கும்.

பசளை மூலகத்தால் பயிருக்கு நன்மை

ஒரு பயிரின் வளர்ச்சிக்கு பலவகையான மூலகங்கள் தேவைப்படினும், முக்கியமாக நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய மூன்று மூலகங்களும் பெருமளவில் தேவைப்படுகின்றன. இவற்றை பயிர் மண்ணிலிருந்து மட்டும் பெறமுடியாதபடியால், பயிரின் வளர்ச்சிப் பருவங்களையொட்டி தேவையான காலங்களில் பயிருக்கு காடுத்தல் மிகவும் அவசியமாகின்றது

முக்கியமான இம் மூன்று மூலகங்களினாலும் பயிருக்குக் கிடைக்கக் கூடிய சில முக்கிய நன்மைகளாவன:–

நைதரசன்

பயிரில் பதிய வளர்ச்சியைக் கூட்டுதல், பச்சையமுள்ள அகன்ற இலைப்பரப்பு உண்டாதல் கூடிய மட்டங்களை ஏற்படுத்தல், கதிரின் நீளத்தைக் கூட்டுதல், கதிரில் மணிகளின் எண்ணிக்கையை கூட்டுதல், மணிகளின் பருமனைக் கூட்டுதல்.

பொஸ்பரஸ்

நல்ல வேர்த் தொகுதியை விருத்தியடையச் செய்தல், நெற்பயிரின் உடற்றொழில் இயக்கங்களை நன்கு நடைபெறச் செய்தல், உறுதியான தண்டைக் கொடுத்தல், நேரத்துக்கு முதிர்ச்சியடையச் செய்தல்.

பொட்டாசியம்

பயிருக்கு நோய் எதிர்க்கும் தன்மையைக் கொடுத்தல், நெல் மணிகள் பதிரின்றி நிரம்பிய மணிகளாக இருக்கச் செய்தல், உறுதியான சாயாத தன்மையைப் பயிருக்குக் கொடுத்தல்

இதிலிருந்து உரப்பசளையின் அவசியம் முக்கியமாகின்றது. உரப்பசளை பாவியாது விடும் சந்தர்ப்பங்களில் இந்நன்மைகளுக்கு எதிரான பாதகமான விளைவுகளே பயிரில் ஏற்படுகின்றது.

அறவழி நின்று பிறர் நலம் பேணி

நற்பணி புரிந்து பலர் மனம் கவர்ந்தார்

வேதநெறி, வளர்ச்சியடையவும், மேன்மை கொள் சைவநீதி உலகில் விளங்கவும், ஆலயங்கள் சிறப்புற்று துலங்கவும், அந்தணப் பெருமக்கள் பெருமையடையவும் அளப்பரும் சேவையாற்றி அழியாப்புகழ் பெற்றவர் அச்சுவேலி பிரம்மஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் ஆவர்.

அறவழி நின்று பிறர் நலம் பேணி, நற்பணிகள் பல புரிந்து மக்கள் மனதில் நிலையான ஒரு இடத்தைப் பெற்ற சிலரில் அன்னார் ஒருவராவர். முப்போதும் திருமேனி தீண்டும் பேறு பெற்று, திரிகரண சுத்தியோடு இறைபணி ஆற்றி சைவ மக்கள் வாழ்வாங்கு வாழ வழிவகுத்தவரும் அவர் என்று கூறலாம். ஒருவரை அறிவு, ஆற்றல் உள்ளவராக உருவாக்குவதில் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெரும் பங்குண்டு. மேலும் அவர்களுக்கு சமூகமும் கூடியளவு சாதகமாக அமையவேண்டும்.

பிரம்மஸ்ரீ ந. சபாபதிக் குருக்களும் தங்கம்மா அம்மையாரும் செய்த நற்றவம் காரணமாக இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன் விய வருடம், கார்த்திகை மாதம் 21ஆம் நாள் (10–11–1886) குமாரசாமிக் குருக்கள் பிறந்தார்கள்.

குழந்தைக்குக் கல்வி புகட்ட விரும்பிய தந்தையார் அக்கால வழக்குப் பிரகாரம் கற்றறிந்த அறிஞர்களிடம் அவரை அனுப்பினார். நீர்வேலி ச. சிவப்பிரகாச பண்டிதர், நல்லூர் த. கைலாசபிள்ளை, சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் ஆகியோரிடம் குருக்கள் அவர்கள் குருசிஷ்ய முறையில் கற்றார்கள். நல்லாசிரியர்களிடம் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களையும், சமய இலக்கியங்களையும் கற்றகாரணத்தால் தனது மொழிமீதும் சமயத்திலும் அதிக பற்று ஏற்பட்டது. அவர் பெற்ற அறிவு உள்ளத்தில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது எனவே அவருடைய சிந்தனை, பேச்சு, செயல் என்பன ஆக்கபூர்வமான முறையில் செயற்பட்டன.

அந்தணர்களுடைய கல்வி இத்துடன் நிறைவு பெறுவதில்லை. சங்கானை அ. அருணாசல சாஸ்திரிகள், புலோலி ம. முத்துக்குமாரசாமிக் குருக்கள் ஆகியோரிடம் வேதங்கள், ஆகமங்கள் என்பவற்றைக் கற்றுத் தெளிந்தார். தமிழ்ப் புலமையும், வடமொழியில் ஆழமான அறிவும்பெற்ற குருக்கள் அவர்கள் ஆற்றிய சமயப் பணிகள் பலவாகும்.

நமது நாடு அப்பொழுது பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டிருந்ததாலும் தமிழ்மொழியும் சைவசமயமும் வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலை இருக்கவில்லை. சைவசமயம் மிகக் குன்றிய நிலையிலிருப்பதைக் கண்ட சைவ அபிமானிகள் அதனைப் பேணிப் பாதுகாக்க பல்துறைப் பணிகளில் ஈடுபட்டனர். ஆலயங்களை மையமாகக் கொண்டு சமயம் வளர்ச்சியடைந்தது. ஆலயங்களின் சிறப்பும் மகிமையும் சிவாச்சாரியர்களில் தங்கியிருந்தது. எனவே நல்ல வடமொழிப் புலமை–சமயக் கிரியைகள் பற்றிய விளக்கம், சமய சாஸ்திர அறிவு எல்லாம் ஒருங்கே அமைந்த சிவாசாரியர்களை உருவாக்குவதன் மூலம் சமயத்தை வளர்க்கலாம் என்று எண்ணினார்.

இதன் பிரகாரம் அன்னாரின் இல்லம் ஒரு குருகுலமாக மாறியது. சிவானந்த குருகுலத்தையும் பிரதம குருவாக விளங்கி வழிநடத்தினார். நல்லூரில் கைலாசபிள்ளையார் கோயிலில் ஒரு வேதாகம பாடசாலை நடைபெற ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். வித்தியா தானத்தின் உயர்வை உணர்ந்த குருக்கள் அவர்கள் அச்சுவேலிப் பிள்ளையார் கோயில் அருகே சரஸ்வதி வித்தியாசாலையை தாபித்து தமிழ், சமயம் விளங்கினார் என்றால் மிகையில்லை. ஆகம வழி நின்று கிரியைகளைச் செய்வதில் நிகரற்று விளங்கியதோடு ஆலயங்கள் அமைப்பவர்களுக்கும் திருப்பணி செய்பவர்களுக்கும் சிறந்த ஆலோசகராகவும் பணியாற்றினார்.

காலம்சென்ற சேர். கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீஸ்வர ஆலயத்தை அமைத்த பொழுது குருக்கள் அவர்களுடைய அரிய கருத்துரைகளைப் பெறத் தவறவில்லை. பெரியாரைப் பேணித் தமராக்கொளல் அரியவற்றுள் எல்லாம் அரியதாகும்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெற்று, அருநோய்கள் கெட வெண்ணீறணிந்து சிவப்பொலிவுடன் விளங்கி, ஆயிரம் பிறை கண்டு அமரத்துவம் எய்திய அச்சுவேலிபிரம்மஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் அவர்களை நினைவு கூர்ந்து அவர் காட்டிய சீரிய நெறிவழி வாழ்வோமாக.

அச்சுவேலி சிவாகம ஞானபானு சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களின் 100 ஆவது பிறந்ததின நினைவுக் கட்டுரை

மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்

இலங்கையைப் பிரிக்க

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகம் அரசின் நேரடி நிர்வாகத்தில் இருக்க வேண்டுமாம். இவரின் இத்திட்டம் நிறைவேறினால் திருகோணமலை மாவட்டம் முழுமையாக சிங்கள மாவட்டமாகும். அது மட்டுமல்ல உத்தேச தமிழ் மாகாணமும் உத்தேச முஸ்லிம் மாகாணமும் சுற்றி வளைக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தின் வட பகுதியான திருகோணமலை மாவட்டத்தில் ஆரம்பித்து – புதிய மதுறுஓயா திட்டக் குடியேற்றத் திட்டத்தினால் மட்டக்களப்பு தமிழ் மாவட்டமும் தெற்கே கல்முனை முஸ்லிம்மாவட்டமும் மேற்குப் பக்கத்தில் சுற்றி வளைக்கப்படும்.

பிரிவினை வேண்டாம் என்று கூறும் ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தை பிரிக்க திட்டம் கொடுக்க வேண்டும். ஒற்றுமை வேண்டுமென்பவர் தமிழர்களை ஒற்றுமையாக இருக்கவிட மாடேன் என்று வடக்கு - கிழக்கு இணைப்பதை மறுப்பதும் ஆகிய ஒன்றுக்கொன்று முரண்பட்ட திட்டங்களை முன்வைத்து அரசியல் சூதாட்டத்தில் இறங்கியிருப்பதும் அவரின் உள்நோக்கத்தைத் தெளிவாக யாருக்கும் காட்டவல்லது.

சொற்சிலம்பம்

போட்டி இல. 43



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி.....

.....

வயது:

விலாசம்:

.....

ஒப்பம்:

போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு வாரமும் முதல் வாரத்தில் வெளியாகும்

இடமிருந்து வலம்

1. முருகக்கடவுள்
5. குன்று
6. தந்தை
8. குதிரை
11. புத்தமுனிவரின் இச் செயற்பாடு அவசியமானது
14. மயிர்
15. நஞ்சு முடியவில்லை
16. உதயன்
18. பாடம்
19. கல்யாணம்
20. முனிவன்

மேலிருந்து கீழ்

1. பாஞ்சாலி செய்தது
2. கொள்கைகளில் ஒரு ரகம்
3. பிரயோசனம்
4. நெற்றிக்கண்ணால் எரிக்கப்பட்டவன் மாறியுள்ளான்
7. அந்தரப்படு
9. கடல்வாழ் உயிரினம்
10. வித்தை
11. ஆதிமனிதனின் வசிப்பிடம்
12. வேப்பம் பூ கொண்டு தயாரிக்கப்படுவது
13. வேடரின் ஆடை
14. தாயின் இளைய சகோதரி
17. காலனுக்கு கடைசி எழுத்து இல்லை

சொற்சிலம்பம் இல. 41 விடைகள்

இடமிருந்து வலம்

1 கீர்த்தனம் 4 [illegible] 5 அம்பலம் 6. பிரம்பு 7. பீதி 9. சிகரம் 10. காகம் 11. சுடு 12. மசி 15. நாசி 16. நம்பிக்கை.

மேலிருந்து கீழ்

1 கீரிப்பிள்ளை 2 தளம்பு 3 நரி 4. கம்பீரம் 5 அம்பிகாபதி 8 திம் 9 சிம்மம் 11. கசி 13 சிபி 14. நகை.

சொற்சிலம்பம் இல. 41 பரிசு பெற்றவர்கள் விபரம்

முதலாம் பரிசு:- திருமதி பாலசரஸ்வதி நாகராஜா
50 சபாபதி வீதி,
யாழ்ப்பாணம்.

இரண்டாம்பரிசு:- செல்வி தி தேவகி
தடுவன் பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

மூன்றும் பரிசு:- செல்வி. து பிரேமளா,
200, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

★ குறிப்பு:-
பரிசுபெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாளஅத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும். எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

அறிவுக்களஞ்சியம் அமரர் சத்திய தேவி

தெய்வ சிந்தனை உள்ள உள்ளம், அமைதியான போக்கு, அடக்கமான நடை, ஆழமான அறிவு, அனுபவம் மிக்க செயற்பாடு, மாணவர்களை அன்பினால் வழிப்படுத்தும் உயரிய போக்கு மற்றவர்களுக்குத் தீங்கு நினையாத தூய உளப்பாங்கு, அல்பாகவும், அடக்கமாகவும் இனிமையாகவும் பேசும் இயல்பு, சத்தியம் தவறாத ஒழுக்கம், எவ்வுயிர்களிடத்தும் கருணைமிக்க அன்பு ஆகிய இலட்சணங்கள் அனைத்தும் ஒருங்கே அமைந்த உயரிய ஆசிரியை—

பண்டிதை சத்தியதேவி

'அறிவுக் களஞ்சியம்' எனப்பலராலும் மதிக்கப்படும் நன்மதிப்பு அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற பண்டிதை சத்திய தேவி துரைசிங்கம் இன்று இவ்வுலகில் இல்லை. இவரின் மறைவு

பண்டிதையின் அந்தியேட்டி நேற்றுநடைபெற்றது

த. பரராசசிங்கம்

சைவ உலகுக்குப் பேரிழப்பாகும்.

என் கடன்பணிசெய்து கிடப்பதே'' என்னும் பெருநோக்குள்ள அம்மையார் அவர்கள் தனது கணவர் அமரர் பண்டிதர் துரைசிங்கம் அவர்களுக்கு உறுதுணையாக

(8–ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பா பாடல்
சம்பூரண சலவைக்கு நுரைவளம் கூடிய
மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள்.
உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்.
10 மில்க்வைற் மேலுறைகளை அனுப்பி
1 திருவெம்பா புத்தகம்
பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற், யாழ்ப்பாணம்.

சஞ்சிகை

22 - 11 - 1986 சனிக்கிழமை

நேரம் பெறுமதியானது
துரித சலவைக்கு
மில்க்வைற் சலவைப் பவுடர்
பாவியுங்கள்.
பாவித்த 10 உறைகளை அனுப்பி
1 அழகிய கைலேஞ்சியைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற், யாழ்ப்பாணம்.

ஈரான் விவகாரம் அமெரிக்க

ராஜதந்திரத்துக்கு மகத்தான தோல்வி

பயங்கரவாதிகளுக்கு விட்டுக்கொடுக்கக் கூடாது. பயங்கரவாதிகளுடன் தொடர்பு எதுவும் வைத்துக்கொள்ளக் கூடாது என்று இறுமாப்புப் பேசி வருபவர் அமெரிக்க அதிபர் ரொனல்ட் றேகன்.

இதே காரணத்தைச் சொல்லி சில மாதங்களுக்கு முன்னர் லிபியா மீது விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இஸ்ரவேல் விமானத் தகர்ப்பு முயற்சியை அடுத்து சிரியா மீதும் இலக்கு வைக்கப்பட்டது.

சர்வதேச அரங்கில் அமெரிக்காவின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ள நாடுகளில் இவையும் அடங்கும்.

இதனாலேயே இவையும் பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

அமெரிக்காவினால் பயங்கரவாதிகள் என்று அழைக்கப்பட்டு வந்த மற்றொரு நாடு ஈரான் ''சர்வதேச கொலைக் கூட்டுத்தாபனம்'' International Murder (Incorporated) என்று அதிபர் றேகன் ஈரானை வர்ணித்து வந்தார்.

இதற்கு பதிலாக 'மகா சாத்தான்'' (Great Satan) என்று ஈரான் அமெரிக்காவை அழைத்து வந்தது.

ஈரானிய மன்னர் ஷாவின் வீழ்ச்சிக்குப் பின்னர் அமெரிக்காவும் ஈரானும் சர்வதேச அரங்கில் கீரியும் பாம்பும் போன்று செயற்பட்டு வந்தன. மத்திய கிழக்கில் உள்ள ஈரான் எதிர்ப்பு நாடுகளை எல்லாம் அமெரிக்கா தட்டிக் கொடுத்து வந்தது.

இந்தச் சம்பவங்களுக்கு மத்தியில் தான் ஈரானுக்கான அமெரிக்க இரகசிய ஆயுத விற்பனை விவகாரம் அம்பலத்துக்கு வந்தது.

(இதுபற்றி கடந்த வாரம் இதே பத்தியில் விரவமாக எழுதப்பட்டிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.)

பத்திரிகையாளர் மாநாடு

அமெரிக்க அதிபர் றேகன் நேற்று முன் தினம் அதாவது வியாழக்கிழமை பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி ஈரான் விவகாரம் பற்றி விளக்கினார்.

ஈரானுக்கு ஆயுதம் அனுப்பும் முடிவு தமது தனிப்பட்ட முடிவு என்றும் எவருடனும் தாம் ஆலோசனை கலக்கவில்லை என்றும் அவர் சொன்னார் தாமே அதற்கு முழுப் பொறுப்பையும் ஏற்பதாகவும். முடிவு தமது சொந்த முடிவே என்றும் கனவான் தனத்துடன் ஒப்புக்கொண்டார்.

ஆனால் இனி ஈரானுக்கு ஆயுதம் அனுப்புவதில்லை என்றும் அவர் கூறினார்.

ஈரானுடன் நல்லுறவுகளை ஏற்படுத்துவதே தமது நடவடிக்கையின் முக்கிய நோக்கம் என்றும் 6 வருட வளைகுடா யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவும், அரச பயங்கரவாதத்தை ஒழிக்கவும். லெபனானில் சிறைப்பிடிக்கப்பட்ட 6 அமெரிக்கர்களை விடுவிக்கவும் இது உதவும் என்றும் றேகன் கூறினார்

ஆனால் லெபனானில் ஈரான் ஆதரவு ஷியா முஸ்லிம்களால் பிடித்து வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்களை விடுவிப்பதற்கான பணயப்பணமே இந்த ஆயுத ஏற்றுமதி என்பதை றேகன் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்கையில் பலத்த சருத்து வேற்றுமைகள் நிலவுவதையே காட்டுகிறது

ஈரானுக்கு ஆயுதம் வழங்குவதை வன்மையாக எதிர்த்துவந்தஅமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் எந்நேரமும் ராஜினாமாச் செய்யலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

நிக்கராகுவா கெரில்லாக்களுக்கான அமெரிக்க இரகசிய ஆயுதவிற்பனை பற்றியும் வெளிவிவகார அமைச்சு எதுவும் அறிந்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் ராஜினாமாச் செய்வாராயின் சமீபகாலத்தில் வெள்ளைமாளிகை நிர்வாகத்துடன் கருத்துமுரண்பாடு கொண்டு ராஜினாமாச் செய்த மூன்றாவது வெளிவிவகார அமைச்சராக அவர் இருப்பார்.

1982இல் லெபனான் மீதான இஸ்ரவேல்படை எடுப்புச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அலெக்சாண்ட் ஹேய்க் பதவி விலகி இருந்தார்.

இதற்கு முன்னர் ஜிம்மி கார்ட்டரின் காலத்தில் ஈரானில் உள்ள அமெரிக்க பணயக் கைதிகளை படைபலம் மூலம் மீட்கும் முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து அப்போதைய வெளிவிவகார அமைச்சர் சைரஸ் வான்ஸ் பதவிதுறந்திருந்தார்.

ஈரான் விவகாரம் அமெரிக்காவுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி இருப்பதாகவும் அது ஈரானுக்குப் பெரும் வெற்றி என்றும் ஈரானிய மதத் தலைவர் ஆயத்துல்லா கொம்மேனி கருத்துத் தெரிவித்துள்ளார்.

''சர்வதேச கொலைக் கூட்டுத்தாபனம்'' என்று ஈரானை வர்ணித்துக் கொண்டு ஈரானுடனான உறவைத் துண்டிக்குமாறு அமெரிக்கா கோரி வந்ததை ஆயத்துல்லா கொம்மேனி நினைவுபடுத்தினார்.

இந்த விவகாரம் சர்வதேச அரங்கில் ஈரானின் ராஜதந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி என்றே கருதப்படுகிறது. அதேசமயம்இதுஅமெரிக்காவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

சிழக்கு, மலையக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்து மூளை சிதறிய நிலையில் மரணமானார். இவர் தேனீர்க்கடை ஒன்றில் பணிபுரிபவர். காலையில் கடைக்கு வரும் போது ராணி தியேட்டர் அருகில் விழுந்த ஷெல்லுக்குப் பலியானார்

மாலையில்

நேற்று மாலை சுமார் ஆறு மணி அளவில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக காத்தான்குடியைச் சேர்ந்த இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

காலையில் வாழைப்பழக் கடைக்குள் விழுந்த ஷெல் வீச்சினால் சேதமடைந்த கடைகளை பார்வையிட வந்தபொழுதே இவர்களுக்கு இப் பயங்கரம் நடந்ததாகக் கூறப்படுகிறது

இவர்களது உடல்களும் சிதறிக் காணப்பட்டன.

அப்துல் சலாம் (23 வயது) அப்துல் சமீன் (25 வயது) ஆகியோரே இறந்த இரண்டு கிழக்கிலங்கை இளைஞர்களாவர்.

இவர்கள் இருவரும் வியாபாரத்தின் நிமித்தம் யாழ்ப்பாணம் வந்தவர்கள் என்று தெரிய வருகிறது.

இச்சம்பவத்தில் இறந்த மற்றையவரின் சடலம் இச்செய்தி நேற்றிரவு எழுதப்படும் வரை அடையாளம் காணப்படவில்லை

கடைகள் சேதம்

நேற்றைய ஷெல் குண்டுகள் யாழ்-பஸ் நிலையம் மின்சார நிலைய வீதி. கடற்கரைப்பக்கம்கொட்டடிப் பக்கம் வாழைப்பழக்கடை, முனீஸ்வரன் வீதி ஆகிய பகுதிகளில் விழுந்து வெடித்தன.

ஷெல் தாக்குதல் காரணமாக வாழைப்பழக்கடைக்குள் இருந்த பாய்க்கடை ஒன்றும் தீப்பற்றி எரிந்தது.

தீயை அணைப்பதற்கு யாழ்-மாநகரசபை தீயணைக்கும் படையினர் உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து வந்தனர்

இச் சம்பவங்களை அடுத்து நகரில் காலை முதல் மாலை வரை பதற்றம் நிலவியது

நகர் வெறிச்சோடியது. கடைகள் யாவும் மூடப்பட்டு நகர் மயான அமைதி கொண்டது.

வெளியூர்களுக்கான மினிபஸ் சேவைகள் வின்சர் சந்தியிலிருந்தும், ஆரிய குளம் சந்தியில் இருந்தும் நடைபெற்றன. (அ-10)

சில தினங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை ஸ்தாபனங்களையும் பிரசைகள் குழுக்களையும் சமூக நலனில் அக்கறையுள்ள ஏனைய பிரமுகர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

- இப்படி அவர் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் சொன்னார். (உ-10)

அறிவுக் களஞ்சியம்..

(7ஆம் பக்க தொடர்ச்சி)

இருந்து யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தி தமிழிலும், ஆங்கில மொழியிலும் பரீட்சைகள் நடத்தி பரிசில்களும் பட்டங்களும் வழங்கி மொழியை வளர்த்துவந்தார்கள். இன்னும் பண்டித தவகுப்புகள், பால பண்டிதவகுப்புகள் நடத்தியும், பரீட்சைகளில் பல பண்டிதர்களை உருவாக்கிய பெருமையும் இவர்களையே சார்ந்ததாகும்.

சைவத்தையும் தமிழையும் தமது இருகண்களாக மதித்த ஆசிரியை சைவசமய வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்தவர், மாணவ, மாணவிகளிடத்தே சமய அறிவுப் போட்டிகள், பண்ணிசைப் போட்டிகள், திருக்குறட் பரீட்சைகள் என்பனவற்றைக் காலத்துக்குக் காலம் நடத்தி பரிசில்கள் வழங்கி சமயத்துறையில் மாணவ, மாணவிகளை ஈடுபடுத்தியமை எம்மனதை விட்டகலாத ஒன்றாகும்.

ஆலயங்கள் தோறும் சமய விழாக்களும் சமயப் பிரசங்கங்களும் நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கன. அந்த வகையில் இவரது சமயப்பிரசங்கங்கள் நடைபெறாத இடமே இல்லையெனலாம்—

இவரது இலக்கியப் பேருரைகள், சிறப்புரைகள் என்பனயாழ்ப்பாண மாவட்டத்தில் நடைபெற்ற பல விழாக்களிலும் முதன்மை பெற்று விளங்கின என்றால் மிகையாகாது.

நீர்வேலி வாய்க்காற் தரவைப் பிள்ளையார் கோவில் திருப்பணிச் சபையின் தலைவராகப் பணிபுரிந்து கோயில் திருப்பணி வேலைகளைச் செவ்வனே நிறைவேற்றியமையும், கும்பாபிஷேகத்தினைச் சிறப்பாக நடத்தியமையும். மேலும் நீர்வேலி செல்லக்கதிர்காமக் வாமி கோயிலின் திருப்பணி வேலைகளைச் செவ்வனே செய்து முடித்தமையும், ஆலயத்தை இன்றைய நிலைக்கு வளரச் செய்தமையும் அம்மையாரின் சமயப்பணியை இப்பகுதி மக்களும் தொடர ஓர் ஊன்றுகோலாகும்.

சமயப்பணியும் தமிழ்ப் பணியும் செய்த அம்மையார் சமூகப்பணியை விட்டு வைக்கவில்லை. 1953ஆம் ஆண்டிலிருந்து காந்தீய — கிராமப்புனருத்தாரணப்பணிகளிலும் ஈடுபட்டுழைத்தார்.

இப்படியான ஒரு சைவாபிமானி, தமிழபிமானி, சமூக சேவகி அறிவுக்களஞ்சியத்தின் மறைவு சைவப் பேருலகுக்குப் பேரிழப்பாகும்.

இணைத்தலும் பிரித்தலும்

பெங்களூரில் புதுக்கணக்கு

30 வருட ஆராய்ச்சியின் பயனா?

இரண்டையும் இணைப்பதற்குப் பதில் ஒன்று, மூன்றாகப் பிரிக்கப்படும்.

இதற்குப் பெயர்தான் பெங்களூர்ப் 'புதுக் கணக்கு'.

இதைத் தயாரித்தவர் தர்மிஷ்டர். தமிழர் தாயகம் உருவாகாமல் தடுப்பது எப்படி?- என்ற அரசியல் ஆராய்ச்சியில் கடந்த 30 ஆண்டு காலமாக ஈடுபட்டு வந்தவர் தர்மிஷ்டர்.

அந்த ஆராய்ச்சியின் உச்சக்கட்டமே இந்த 'பெங்களூர்ப் புதுக்கணக்கு'

1957 இலே இணைப்பை எதிர்த்தார். இணைப்பை அனுமதித்தால் 'தமிழருக்கு தாயகம்' உருவாகி விடும் என்று காட்டும் வரைபடத்தைத் தூக்கிக் கொண்டு ஊர் வலம் போனார்.

அப்போது அவர் கொண்டு போன வரைபடத்தில் கிழக்கு மாகாணத்தில் இன்ன இன்ன இடங்களில் சிங்களவர் நிறைய வாழ்கின்றனர் என்று கீறிக்காட்டப்படவில்லை.

அப்போது தான் கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் குடியேற்றம் தொடங்கியது.

ஒரு சிங்கள எம்பியைத் தெரிவு செய்யக் கூடிய அளவு சிங்கள வாக்காளர் கூட கிழக்கு மாகாணத்தில் அப்போது இருக்கவில்லை.

பச்சை இனத்துவேஷத்தைக் கிளப்பி இணைப்பைக் குழப்பியவர் தான் இன்றைய தர்மிஷ்டர்.

இன்று என்ன செய்தார்?

மீண்டும் வரைபடம் ஒன்றைத் தூக்கிக் கொண்டு பெங்களூர் யாத்திரை சென்றார்.

திருகோணமலையில் பெருந் தொகையானோர் சிங்களவர் என்று அரசியலில் இரண்டு வருட அனுபவம் பெற்றவருக்குக் காட்டினார்.

ஆகவே கிழக்கு மாகாணத்தில் தமிழருக்கு ஒரு மாகாண சபை, முஸ்லிம்களுக்கு ஒரு மாகாண சபை, சிங்களவருக்கு ஒரு மாகாண சபை- என்று ஒன்றை மூன்றாகப் பிரிக்கும் திட்டத்தை விளக்கினார்.

1957ம் 1986ம்

1957 வரைபடத்திலே இல்லாதது 1986 வரைபடத்தில் எப்படி வந்தது?

அதற்கான காரணங்களை ராஜீவ் கேட்டு இருப்பாரா? அல்லது தர்மிஷ்டர் சொல்லி இருப்பாரா? இது எல்லாம் நந்திமலை இரகசியம்.

பெங்களூர் போன வரைபடத்தைத்தயாரித்துக் கொடுத்தவர் சொல்லுக்குச் சொல் அர்த்தம் காணும் அத்துலத் முதலி.

1957 வரைபடத்தை தர்மிஷ்டர் தூக்கிச் சென்ற போது இவர் அரசியலில் இல்லை: ஒக்ஸ்போர்டில் தான் இருந்தார்.

1957 இல் கிழக்கில் சேருவில திகாமடுல்ல (அதுதான் அம்பாறையின்புதுப்பெயர்) இலே; இடையிலே வந்தவை.

அவற்றை எல்லாம் சேர்த்து சிங்களவருக்குத் திருகோணமலை மாகாண சபையாக வழங்குவதே அரசின் பிந்திய திட்டம்.

கிழக்கு மாகாணத்தைத் தமிழருக்கு கொடுத்தால் சிங்களவர் சிறுபான்மையாகி விடுவரே என்ற கவலையால் தான் இப்புதிய திட்டம் உருவானது

இத்திட்டத்தைத் தயாரித்தவர்களிடம் ஒரு கேள்வி:-

''வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர் எண்ணிக்கையிலும் பார்க்க, சிங்களவர் மத்தியில் தான் பெரும் எண்ணிக்கையில் தமிழர் வாழ்கின்றனர் என்று அடிக்கடி கூறி வருகின்றீர்கள். அவர்களைப் பற்றிக் கவலைப்படுவது இல்லையா? என்று தமிழ்த் தலைவர்களைக் கேட்கின்றீர்கள்.

''ஆனால் உங்கள் புதிய திட்டத்தின் கீழ் சிங்களப் பிரதேசத்தில் வாழும் தமிழருக்கு, முஸ்லிம்களுக்கு மாகாணசபைகள் அமைக்கப்படுமா?

கிழக்கு மாகாணத்தில் அரசினால் குடியேற்றப்பட்ட சிங்களவர் பெறப்போகும் உரிமையை சிங்களப் பிரதேசத்தில் வாழும் தமிழரும் முஸ்லிமும் பெறக்கூடாதா?''

இப்படி ஒரு சாரார் கேட்கின்றனர் என்பது சொல்லுக்குச் சொல் அர்த்தம் பார்ப்பவர்களின் காதுகளில் விழுந்தால் போதும்.

இணைப்பை எதிர்த்த பாவம், நந்திமலை சென்றும் தீரவில்லை.

இந்த நிலையில் இனப் பிரச்சினையின் அடுத்த கட்டம் என்ன? என்று பலவிதமாக ஊகிக்கப்பட்டு வந்த நேரத்தில் இஸ்ரவேல் ஜனாதிபதியின் திடீர் கொழும்பு விஜயம் புதிய மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி உள்ளது.

அடுத்து நடப்பவற்றைப் பொறுத்து இருந்து பார்க்க வேண்டும்.

உள்ளும் புறமும்

குமுமணி

ஈகஉலா

என்.பி.சீலன்

றேகன் இதனை மறுத்த போதிலும் அமெரிக்காவில் தற்போது வெளியிடப்பட்டுள்ள இரு பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்புகள் றேகனின் மறுப்புகளை சாதாரண அமெரிக்க மக்கள் ஏற்கத் தயாராக இல்லை என்று தெரிவிக்கின்றன.

வீழ்ச்சியை நோக்கி

ரிக்சர்ட் நிக்ஸன் காலத்தில் 'வாட்டர் கேட்' ஊழல் விவகாரம் எப்படி குடியரசுக் கட்சியை செல்வாக்கு இழக்கச் செய்ததோ அதே போன்றே குடியரசுக் கட்சி மற்றும் ஒருபெரும் வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

1979 - 81 அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் காரணமாக 1980 இல் அமெரிக்க ஜனாதிபதித்தேர்தலில் தோல்வி கண்டவர் ஜிம்மி கார்ட்டர். இவரும் இவருக்கு முன் பதவியில் இருந்த ஜிரோல்ட் போர்ட்டும் ஈரான் விவகாரம் தொடர்பாக அதிபர் றேகனை வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

ஈரான்விவாரம் அமெரிக்க வெளியுறவுக்கொள்கையில் பலத்த சருத்து வேற்றுமைகள் நிலவுவதையே காட்டுகிறது

ஈரானுக்கு ஆயுதம் வழங்குவதை வன்மையாக எதிர்த்துவந்தஅமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் எந்நேரமும் ராஜினாமாச் செய்யலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

நிக்கராகுவா கெரில்லாக்களுக்கான அமெரிக்க இரகசிய ஆயுதவிற்பனை பற்றியும் வெளிவிவகார அமைச்சு எதுவும் அறிந்திருக்கவில்லை என்று கூறப்படுகிறது.

ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் ராஜினாமாச் செய்வாராயின் சமீபகாலத்தில் வெள்ளைமாளிகை நிர்வாகத்துடன் கருத்துமுரண்பாடு கொண்டு ராஜினாமாச் செய்த மூன்றாவது வெளிவிவகார அமைச்சராக அவர் இருப்பார்.

1982இல் லெபனான் மீதான இஸ்ரவேல்படை எடுப்புச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அலெக்சாண்ட் ஹேய்க் பதவி விலகி இருந்தார்.

இதற்கு முன்னர் ஜிம்மி கார்ட்டரின் காலத்தில் ஈரானில் உள்ள அமெரிக்க பணயக் கைதிகளை படைபலம் மூலம் மீட்கும் முயற்சி தோல்வி அடைந்ததை அடுத்து அப்போதைய வெளிவிவகார அமைச்சர் சைரஸ் வான்ஸ் பதவிதுறந்திருந்தார்.

ஈரான் விவகாரம் அமெரிக்காவுக்குப் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தி இருப்பதாகவும் அது ஈரானுக்குப் பெரும் வெற்றி என்றும் ஈரானிய மதத் தலைவர் ஆயத்துல்லா கொம்மேனி கருத்துத் தெரிவித்துள்ளார்.

''சர்வதேச கொலைக் கூட்டுத்தாபனம்'' என்று ஈரானை வர்ணித்துக் கொண்டு ஈரானுடனான உறவைத் துண்டிக்குமாறு அமெரிக்கா கோரி வந்ததை ஆயத்துல்லா கொம்மேனி நினைவுபடுத்தினார்.

இந்த விவகாரம் சர்வதேச அரங்கில் ஈரானின் ராஜதந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி என்றே கருதப்படுகிறது. அதேசமயம்இதுஅமெரிக்காவுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தி இருக்கிறது.

அமெரிக்காவில் நீலன்

கொழும்பு, நவ 22 தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் அமெரிக்கா சென்றுள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி வாஷிங்டன் சென்ற இவர் இந்தியா வழியாக நாளை கொழும்பு திரும்புவார். (உ-ஏ)

காணாமல்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களைக் கண்டுபிடிப்பதற்காகவே நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரிகிறது.

காணாமல் போன சிப்பாய்களை தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் இரண்டு ஹெலிக்கொப்டர்களும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை முல்லைத்தீவு இராணுவமுகாமுக்கு மேலும் பல இராணுவத்தினரும் நவீனரக ஆயுதங்களும் கொண்டு வரப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (உ-ஏ-10)

MATRIMONIAL

Parents seek bride from respectable Hindu Vellala family for son. 31, residing in Canada Mars in Lagna Contact with horoscope and all particulars. No Brokers please. Advt No. 39, C/o Uthayan Jaffna.

விற்பனைக்கு

Westpoint Deep Freezer 6.5 CFT விற்பனைக்குள்ளது. விளம்பரதாரர் M64,மேஃபா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி (சென்ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியிட்ட திகதி 22 - 11 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA

யாழ்ப்பாண பாடசாலைகள்
விளையாட்டுச் சங்கம்
உதைபந்தாட்டம் 1986
15 வயதுக்குட்பட்டோர்
இறுதியாட்டம்
★ ஒஸ்மானியா எதிர் நடேஸ்வரா
(மூன்றும் இடத்திற்கான தெரிவு)
★ யூனியன்எதிர்கொக்குவில் இந்து
(இறுதியாட்டம்)
இடம்: மானிப்பாய் இந்து மைதானம்
காலம்: 23-11-1986 (ஞாயிறு) பி.ப. 3 மணி
பிரதம விருந்தினர்:
திரு. இரா. சுந்தரலிங்கம்
(வட மாநில கல்விப் பணிப்பாளர்)
உதைபந்தாட்டப் பிரியர்களை
அன்புடன் அழைக்கின்றோம்.
ஒஸ்மானியா கல்லூரி க. மு. சா ஹமீட்
யாழ்ப்பாணம். (உதைபந்தாட்ட செயலாளர்)

இலங்கைப் பல்கலைக் கழகங்களின்
வெளிவாரிப் பட்டமாணிப் பரீட்சைகள்
கல்வியாண்டு 1987 / 88
இலங்கைப் பல்கலைக் கழகங்களில் அனுமதி கிடைக்காதவர்களின் தேவை கருதி
வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கான பயிற்சி வகுப்புகள் (2ஆவது பிரிவு)
ஜனவரி மாதம் 5ஆம் திகதி (05-01-1987) ஆரம்பமாகின்றன.
க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
கலைமாணி (B. A.) விஞ்ஞானமாணி (B Sc.) வர்த்தகமாணி (B. Com.)
(கணிதம்)
★ 3 வருடங்களில் B A., B. Sc. பட்டதாரியாகலாம் ★ 4 வருடங்களில் B. Com. பட்டதாரியாகலாம்
(பட்டதாரிகளானால் உடனடி வேலை வாய்ப்புக்கள்)
விண்ணப்பங்கள் டிசம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் பெற ''பதிவாளர், அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்'' என்ற பெயருக்கு ரூபா 10இற்கான காசுக் கட்டளையுடன் 9'' x 4'' அளவுடைய சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறையை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.
பதிவாளர், ASIAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD, JAFFNA. Branch: 101/1, STANLEY ROAD, JAFFNA.
(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம், 1ஆம் மாடி.) (மக்கள் வங்கிக்கருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org